விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- புத்து

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 14 சனிக்கிழமை (30.10.2004) தொலைபேசி - 2223378 ஒலி 316

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦ வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦ 365 நாள் சேவை
♦ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ். பல்கலை மாணவன் பலி!

### யாழ்ப்பாணத்தில் விபத்தின் துயரம் நீள்கிறது

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார்.

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிறவுண்றோட்டும் ஆடிய பாதம் வீதியும் இணைகின்ற சந்திக்கு அண்மையில் இத்துயரச் சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்தில் மட்டக்களப்பு காரைதீவை சேர்ந்த யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவன் சீவரத்தினம் விவேகானந்தமூர்த்தி (வயது24) என்பவரே பலியானவராவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



மோட்டார் சைக்கிள் வித்தில் மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக மாணவனுக்கு இன்று அதிகாலை 1.30 மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாண வர்கள் அஞ்சலி செலுத்துவதை படத்தில் காணலாம்.

### விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த

# இடைக்கால வரைபின் அடிப்படையில் அரசு பேச்சை ஆரம்பிக்க வேண்டும்!



## ஐ.தே.க தலைவர் ரணில் வேண்டுகோள்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப் படையில சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும்.**

**இதில் இருவேறுபட்ட கருத்துக்கு இடமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதி படத் தெரிவித்துள்ளார்.**

**ஆனால் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார்.**

இந்தியா உட்பட ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளின் ஜனநாயகத்திற்கான ஒத்துழைப்பு மகாநாடு இன்று கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமது கட்சியின் ஆட்சிக் காலத்தில் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் - அகாசி சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்த தலைமையிலான குழு ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசியைச் சந்தித்துக் கலந்துரையாடியது. இச் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் ஜப்பானியத் தூதுவரின் இல்லத்தில் நடை பெற்றது.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பிரதான எதிர்க்கட்சியும் அரசாங்கமும் ஒஸ்லோப் பிரகடனத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஒரு இணக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கில் இலங்கையர் ஒருவர் தீவிரவாதிகளால் கடத்தல்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த ட்றக் வண்டி சாரதியொருவர் உட்பட இரண்டு சாரதிகள் ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளார்கள்.

அமெரிக்க இராணுவத்தோடு இணைந்து செயலாற்றிய இலங்கை ட்றக் வண்டி சாரதியும், பங்களாதேஷ் சாரதியுமே ஈராக்கிய இஸ்லாமிய தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருப்பதாக 'அல் ஜசீரா' செய்தி வெளியிட்டுள்ளது.

குவைத் நிறுவனமொன்றில் தொழில் புரிந்து வந்த இவர்கள், அமெரிக்க இராணுவத் தளத்திற்கு சென்றுகொண்டிருந்த போது கைது செய்யப்பட்டிருப்பதாக தீவிரவாதிகள் அனுப்பியுள்ள ஒளி நாடாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இலங்கையர் குறித்த விபரங்களை சேகரிக்க இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அத்துடன் இவ் இலங்கையர் குறித்த விபரங்களை ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு லெபனானில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நேற்று புலிகள் - படையினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்கும் படைத் தரப்பினருக்குமான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று யாழ். மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு சுமார் 2 மணிநேரம் நடைபெற்றது. யாழ். மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத். தலைவர் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் சமகால வி[illegible]யங்கள் குறித்தும் யாழ். மாவட்ட நிலை[illegible]கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, அரசியல் துறையைச் சேர்ந்த இமயவன், நர்மதன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞானக் கண்காட்சி இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களால் நடாத்தப்பட்டு வந்த விஞ்ஞானக் கண்காட்சி தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று நடைபெறமாட்டாது என விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் அறிவித்துள்ளார்.

இக் கண்காட்சி எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் வழமை போல் நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# ஆளுநர் அசோக ஜெயவர்த்தனவின் யாழ். விஜயத்துக்கு கடும் எதிர்ப்பு!

### யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம் கடிதமூலம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவின் யாழ்ப்பாண வருகையை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடுமையாக எதிர்த்துள்ளது.

இது குறித்து ஒன்றியம் ஆளுநருக்கு யாழ்ப்பாண விஜயத்தை ரத்துச் செய்யுமாறு கோரியும் தமது விசனத்தை வெளியிடும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்வு நிலை வழமைக்குத் திரும்பவில்லை. புலம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியவில்லை. இவ்வாறான நிலையில் ஆளுரின் யாழ். வருகை எவ்வித பலனையும் தரப்போவதில்லை என பொது அமைப்புக்கள் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

போரினால் உயிரிழந்து, உடைமையிழந்து, வாழ்வின் ஆதாரங்கள் அனைத்தையும் இழந்து பட்டினியுடன் வாழ்வை சுமந்து செல்லும் இந்த மக்களின் நிலை குறித்து அரசு கவனம் செலுத்தவில்லை. வடக்கு கிழக்கு ஆளுநராக இருக்கும் தாங்களும் அரசுக்கு இது குறித்து இடித்து சொல்லவில்லை. இந்த நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெறத் தகுதியுள்ள தமிழர்கள் இருந்து வருகிறார்கள். தமிழ் மக்களின் உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்கென அதிக நிதி ஒதுக்கீடு யுத்தத்திற்கான ஆயத்தமா?

## தமிழ் மக்கள், புலிகள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்கென அதிகளவு நிதியினை அரசாங்கம் ஒதுக்கியுள்ளமை யுத்தத்துக்கான ஆயதததமா? என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் மத்தியில் எழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உப செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சமாதான முயற்சியினை முன்னெடுக்க நடவடிக்கை எதனையும் எடுக்காத நிலையில் இத்தகைய சந்தேகம் நியாயமானது என்றும் அவர் மேலும்சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடொன்றினை நடத்திய அவர் அதில் மேலும் கருத்து வெளியிடுகையில்,

அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிப்பதற்கான எத்தகைய நடவடிக்கையினையும் எடுக்கவில்லை. இந் நிலையில், வரவு -செலவுத் திட்ட நகல் சட்டமூலத்தில் பாதுகாப்பு செலவினத்திற்கு அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளமையினால் நாடு மீண்டும் யுத்தத்துக்கு செல்லுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் தான். ஆனால் சமாதான முயற்சி நடைபெறும் இத்தறுவாயில், பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி என்ன தேவைககாக பயன்படுத்தப்படப் போகின்றது என்பது தான் முக்கியமான தாகும்.

மககளுக்களித்த தேர்தல் வாக்குறுதிகளில் 80 சதவீதமானவற்றை நிறைவேற்றிவிட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. அவ்வாறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் ஜே.வி.பி. ஏன் தொடர்ந்தும் அரசாங்கத்தை அச்சுறுத்த வேணடும்?

சமாதான முயற்சியை மீள ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. ஆனால் வரவு- செலவு திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ள இவ்வேளையில், நிதி உதவிதேவை என்பதால் அதனைப் பெறும் நோக்கிலேயே அரசாங்கம் சமாதான முயற்சி குறித்துப் பேசி வருகிறது.

விலை வாசியை குறைக்குமாறும், வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் கோரி ஐக்கிய தேசியக் கட்சி நடாத்திவரும் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்களை முறியடிககும் வகையில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இத்தகைய போக்குகளை விடுத்து வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் முன்வரவேண்டும்.

சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பைப் பார்க்கும் போது கடலுக்குள குதிக்கலாம் போல் உள்ளதென ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்துள்ளார். இத்தகைய கேலிப பேச்சுக்களை விடுத்து ஆக்கபூர்வமான் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்பாக ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச பல கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

அரசாங்கம் தனது வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேணடும். அரசாங்கத்துக்குள் அங்கம் வகித்துக் கொண்டு கடித மூலமும், அறிக்கை மூலமும் மட்டுமே ஜே.வி.பி. எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றது.

எனவே, வாக்குறுதிகளை நிறைவேற்றவும் ஜே.வி.பி. முயலவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ற)

## திருட முயன்றவர் மடக்கிப்பிடிப்பு

கொக்குவில் பிரம்படி லேனில் உளள வீடொன்றில் இரவு வேளையில் புகுந்து திருடமுற்பட்ட நபரொருவரை அப்பகுதி மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்டுத் தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் இந்நபர் யாழ.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த நபர் சிகிச்சைக்காக பொலிஸ் பாதுகாப்புடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ற-19)

## இருவருட சிறை

புத்த பெருமானுக்கு அபகீர்த்தி ஏறபடுத்தும் வகையில் பல படங்களை இணையத்தளம் மூலம் வெளியிட்ட கணனிப் பொறியியலாளர் ஒருவருக்கு கொழும்பு நீதிமன்றம் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது. (ற-8)

## புளொட் உறுப்பினர்கள் இருவரை காணவில்லையென முறைப்பாடு

வவுனியா மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இரண்டு புளொட் இயக்க உறுப்பினர்கள் காணாமல் போயுள்ளதாக வவுனியாவிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடு செயயப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் ஜெயமனோகரன் நவரத்தினம், செல்லையா செல்வராசா எனவும் இவர்களின் மோட்டார் சைக்கிள் இரணடும் பண்டாரிக்குளம் முனியப்பர் கோயிலடியிலும், வவுனியா வைரவ புளியங்குளத்திலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோட்டார் சைக்கிள்கள் இரணடும் தற்போது வவுனியா பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# அரியாலை பகுதியில் உள்ள 5 ஆலயங்களில் ஒரே இரவில் திருடர்கள் கைவரிசை

## பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் கடந்த செவ்வாயன்று இரவு அடைமழை பெய்து கொண்டிருந்த சமயம் ஐந்து பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளார்.

இதன்போது அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலயம், புங்கஙகுளம் நாச்சிமார் கோவில், பேச்சியம்மன் கோவில், அரியாலை சரஸ்வதி கோவில் மற்றும் முத்துமாரி அம்மன் கோவில் ஆகியவற்றிலேயே களவுகள் இடம்பெற்றுள்ளன.

இவ் ஆலயங்களில் இருந்து பணம், நகைகள் மற்றும் ஐம்பொன் விக்கிரகங்கள் போன்றவை கதவுகள் உடைக்கப்பட்டுத் திருடபபட்டுள்ளன எனத் தெரியவருகின்றது. இவ் ஆலயங்களில் இடம்பெற்ற திருட்டுக்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் நேரில் சென்று விசாரணை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனினும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் போதாதிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் திருட்டுச்சம்பவங்களிலும் ஆலயங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் திருட்டுகளும் கணிசமான அளவில் காணப்படுகிறது.

ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் திருட்டு நடவடிக்கைகளால் பணம் கொள்ளை போவதைவிட அங்கிருக்கும் பெறுமதிவாய்ந்த கலை பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக் கூறிநிற்கும் அரும்பொருட்களை விக்கிரகங்கள், சிற்ப உருக்கள் என்பனவும் திருடப்பட்டு வெளி இடங்களுக்குக் கடத்தப்படுகின்றன.

இந்து கலாசாரத்தை வெளிப்படுத்தி நிற்கும் இவ்வாறான சிற்பங்களும் விக்கிரகங்களும் கடத்தப்படுகின்றமை இந்து மக்களுககு எதிரானதொரு செயல் என பலராலும் விசனம் தெரிவிக்கப் படுவதுடன்,

இவற்றின் பின்னணியில் பிறமத சக்திகள் இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (ப-16)

## நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தனியார்துறையும் பங்காற்ற வேண்டும்

(கொழும்பு)

நாட்டில் அபிவிருத்திச்செயற்பாடுகளுக்கு அரச துறையினர் மாத்திரமன்றி தனியார் துறையினரும் தமது பங்களிப்புகளை வழங்க வேண்டுமென்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கோரிக்கை விடுத்துள்ளார்.

பண்டாரநாயக்க சாவதேச ஞாபகார்த்த மண்டபத்தில் சிலிங்கோ கம்பனிகள் நடத்திய வர்த்தக மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நிதியமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

உலகில் பல நாடுகள் தனியார் துறையினர் மீது கட்டுப்பாடுகளை விதித்ததினால் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன.

இலங்கை அரசாங்கம் தனியார் துறையினருக்குத் தமது பங்களிப்புகளை வழங்க விரும்புகின்றது.

வரவு-செலவுத் திட்டம் மூலம் சிறிய நடுத்தர அளவிலான வர்த்தகச் செயற்பாடுகளையும் கைத்தொழில் துறைகளையும் ஊக்கிவப்பதற்கு அரசு கவனம் செலுத்தும்.

சிறிய நடுத்தர வர்த்தகர்களின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான பல திட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது எனவும் கலாநிதி சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார். (ற-8)

## வெளிநாட்டுப் பயிற்சிக்காகச் செல்லும்

# வைத்தியருக்கான பிணைத் தொகையை 5 மில்லியனாக அதிகரிக்கத் தீர்மானம்

வெளிநாடுகளுக்குப் பயிற்சி பெறச் செல்லும் வைத்தியர்களுக்கான பிணையின் தொகையை 5 மில்லியனாக உயர்த்துவற்கு சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளில் பயிற்சி பெறச் செல்லும் வைத்தியர்கள் பயிற்சி முடிந்ததும் நாடுதிரும்பாமல் அங்கேயே தங்கிவிடும் போக்கைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.


படடப்பின் படிப்புகளுக்கென்று சுகாதார அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்ட வைத்தியர்கள் பலர், தமது படிப்பை முடித்துக்கொண்டு திரும்பவில்லை. இதனால் இந் நடவடிக்கை அவசியமாகிறது என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா மற்றும் பிரித்தானியாவிலிருந்து சுமார் 70 வைத்தியர்கள் இவ்வாறு திரும்பி வராமல உள்ளனர். இதற்கான அமைச்சரவை அங்கிகாரம் விரைவில் பெறப்படவுள்ளதாக அமைச்சு அதிகாரி ரொறன்ஸ் டி சில்வா தெரிவித்தார்.

ஆயினும், இதற்கு மருத்துவத்துறை சார்ந்தவர்களிடமிருந்து அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. (ற-6)



அண்மையில் இடம்பெற்ற வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத் திறப்புவிழாவில் மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆர்.தியாகராசா உரையாற்றுவதையும், பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கப் பொது முகாமையாளர் க.நித்தியகுமார் உட்பட மற்றும் பிரமுகர்கள் விழா மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். படம்:- வே.தவச்செல்வன்



உலக குடியிருப்புத் தினத்தையொட்டி தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் 2ஆம் இடத்தைப்பெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி எஸ்.செல்வரஞ்சினிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் விருது வழங்குவதைப் படத்தில் காண்க. படம்:- பரு.நிருபர்



வட்டு-யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ்த்தின விழாவில் இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வுக் காட்சியொன்றைப் படத்தில் காண்க.

## இன்று ஒரு தகவல்

### அறிவுரை

ஒரு இளம் தாய் அறிஞர் அரிஸ்டோட்டிலைத் தேடிப் போனார். அவரிடம் போய் "ஐயா! என் பிள்ளைக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். என்று ஆசைப்படுகிறேன். எந்த வயதில் ஆரம்பிக்கலாம்?" என்று கேட்டார். அதற்கு அரி டோட்டில் "குழந்தையின் வயது என்ன?" என்று கேட்டார். அந்தப் பெண் 'ஐந்து வயது" என்று சொன்னார். அரிஸ்டோட்டில் உடனே "ஐயையோ! உடனே வீட்டுக்குப் போ. ஏற்கனவே ஐந்து வருடம் தாமதித்து விட்டாய்" என்றாராம்.

இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுபபதற்கு நேரம் காலம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரே மகன். "என்ன சார்! மகனைப் பாடசாலையில் சேர்க்கவில்லையா?" என்று கேட்டால் அவர் என்ன பதில் சொல்வார் தெரியுமா? "அதற்கெலலாம் நேரம் காலம் வரவேண்டாமா? அது தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்பார். இவரெல்லாம் எந்தக் காலத்தில் பிள்ளையைப் படிக்க வைக்கப்போகிறார்.

நல்ல பழக்கத்தை சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றால் முதலில் நாம் அதற்குத் தயாராகி விடவேண்டும். ஒரு பெரியவரிடம் ஒரு அம்மா தனது பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வந்தார். என்ன அம்மா விஷயம் என்று கேட்டார். அந்தப்பெரியவர் ஐயா என்பிள்ளை எப்போதும் சீனி சாப்பிடுகிறான் சொன்னாலும் கேட்கிறான் இல்லை. நங்கள் தான் அவனுக்கு நல்ல புத்தி கூறவேண்டும் என்றார் அந்த அம்மா.

அந்தப்பெரியவர் கொஞ்ச நேரம் யோசித்தார். 'சரி நீ போய்விட்டு ஒரு வாரம் கழித்துவா என்று கூறி அனுப்பிவைத்தார். இவர் மீண்டும் ஒரு வாரம் கழித்து மீண்டும் பிள்ளையுடன் வந்தார். அந்தப்பெரியவர் அந்தப பிள்ளையிடம் சீனி சாப்பிடக்கூடாது என்று நிறையப் புத்திமதி கூறினார். சரி... இனி இவன் சீனி சாப்பிடமாட்டான் போய் வா என்று சொன்னார்.

இந்த நேரத்தில் அந்த அம்மாவுக்கு ஒரு சந்தேகம். கொஞ்சம் தயங்கிக்கொண்டே நின்றார். என்ன அம்மா யோசிக்கிறாய்? என்று கேட்டார் பெரியவர். "ம்... ஒன்றுமில்லை இப்போது நீங்கள் சொன்ன இந்த புத்திமதியை ஒரு வாரத்திற்கு முன்பே சொல்லியிருக்கலாமே! ஏன் ஒரு வாரம் கழிதது மீண்டும் வரச்சொன்னீகள்?" என்று கேட்டார் அந்த அம்மா. இதற்கு அந்தப்பெரியவர் அப்படி இல்லை அம்மா ஒரு வாரம் கழித்து வரச் சொன்னதற்குக் காரணம் இருக்கின்றது. போனமுறை நீ வந்த போது இந்தப்புத்திமதியை ஏன் சொல்லவில்லை என்றால் அதுவரை நானும் சீனி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இந்த ஒருவார காலத்திற்குள் அந்தப்பழக்கத்தை நான் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு விட்டேன். இப்போது நான் சீனி சாப்பிடுவதில்லை. அதனால் இப்போது தான் அந்த அறிவுரையைச் சொல்லக்கூடிய தகுதி எனக்கு வந்திருக்கறது. அதனால்தான் அப்படிச் சொனனேன் என்றார். இந்தக் காலத்தில் அறிவுரை சொல் வதற்கு நிறையப்பேர் இருக்கின்றனா. ஆனால் அறிவுரை கூறும் தகுதி அவர்களுக்கு இருக்கினறதா என்பது சந்தேகம். பல அறிவுரைகளுக்கு மரியாதை இல்லாமல் போவதே இந்தத் தகராறினால் தான்.

அஹிம்சையைப் பறறி பாடம் நடத்தப்போகிறேன் என்று வந்தார் ஒருவர். அவருக்கு என்ன தொழில் என்று விசாரித்தார்கள். கசாப்புக்கடை வைத்திருக்கிறாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நகைக்கடை உரிமையாளர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் உள்ள நகைக்கடை ஒன்றின் உரிமையாளர் இனந்தெரியாதோரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அவர் தனது கடையைப் பூட்டிவிட்டு சுழாவடி சேர்ச் லேனில் உள்ள தனது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில சென்ற சமயம் இனநதெரியாத மூவர் அவரை வழிமறித்துத் தாக்கினர். எனினும் அவர்களின் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இவர் தனது கடையைப்பூட்டிய பின் அங்கிருக்கும் நகைகளை வீட்டிற்குக் கொண்டுவருவதாகவும் சம்பவதினத்தன்று இர்வும் இவ்வாறு கொண்டுவந்தபோதே அதனைப் பறிப்பதற்காகவே அவர் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக மானிப்பாய் பொலிஸில முறையிடப்பட்டுள்ளது. இதேவேளை, இவரின் கடையில் சில மாதங்களுக்கு முன்னர் கிருட்டுப்போயிருந்கமை குறிப்பிடக்கக்கது. (ச)

## வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பதற்காக அமெ. பேராசிரியருக்கு 20 இலட்சம் சன்மானம்

### அரசு வழங்கியதாக பந்துல குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமெரிக்கப் பேராசிரியர் ஒருவருக்கு சுமார் 20 இலட்சம் ரூபாவை சன்மானமாக வழங்கியே நிதியமைச்சு அடுத்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது என்று முன்னாள் பிரதிநிதியமைச்சர் பந்துல குணவர்தன எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கப் பேராசிரியரின் உதவியுடன் நிதியமைச்சு சர்வதேச நிதி நிறுவனங்களைப் புறக்கணித்து இம்முறை வரவு செலவுத்திட்டத்தை அரசு தயாரித்துள்ளது என்று தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில்,

மககள் விடுதலை முன்னணியின் யோசனையின் அடிப்படையிலதான் இம்முறை வரவு- செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென் அக்கட்சி மார்தட்டிக் கொண்டிருக்கின்றது.

ஆனால் உண்மை அது வல்ல! திறைசேரியின் செயலாளர் டாக்டர் பி.பீ ஜயசுந்தர அமெரிக்காவில் கல்விகற்ற போது அவருக்கு விரிவுரையாற்றிய பேராசிரியர் கஸ்பெப்பளிக்கின் உதவியுடனேயே அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பேராசிரியர் கடந்த 30 நாட்களாக திறைசேரியில் தான் இருந்துள்ளார். அவரது உதவியுடன்தான் சர்வதேச நிதி நிறுவனங்களின் யோசனைகளை புறக்கணித்து வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படடுள்ளது. இதன்போது அமெரிக்கப் பேராசிரியருக்கு நாளொன்றுக்கு 650 அமெரிக்க டொலர் வீதம் 30 நாட்களுக்கு சன்மானம் வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கிய நிதியுதவிகளிலிருந்தே அமெரிக்க பேராசிரியருக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் வேடிக்கையானது.

நாட்டையும் நாட்டு மக்களையும் ஏமாற்றுகின்ற வரவு செலவுத்திட்டத்தை அரசாங்கம் அமெரிக்கப் பேராசிரியரின் உதவியுடன்தான் தயாரித்தது என்பது மக்கள் விடுதலை முன்னணிக்குத் தெரியாதா?

அரசாங்கம் மக்களை ஏமாற்ற நாடகம் ஆடிக்கொண்டிருக்கின்றது. வரவு-செலவு திட்டத்தின் ஊடாக மக்கள் எதிர்பாரகின்ற நிவாரணங்களை அரசாங்கத்தால் வழங்கமுடியாது. ஏனெனில், தீர்க்க தரிசனமான பொருளாதார முகாமைத்துவத்தை அரசாங்கம் பேணுவதாகத் தெரியவில்லை.

தேரதலுக்கு முன்னர் மக்களுக்கு அள்ளி வீசிய வாக்குறுதிகளை இந்த வரவு செலவுத்திட்டத்தினூடாக அரசாங்கம் நிறைவேற்றவேண்டும். ஆனால் அரசாங்கத்தால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது.ஜனாதிபதிக்கு அதிகாரப்பற்று அதிகம்.

எப்படியாயினும் ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும். இந்த அடிப்படைகளை வைத்துப் பார்க்கும்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பது கேள்விக்குரியது. இந்நிலைப்பாடுகளை ஐ.தே.க. மக்களுக்குச் சிறந்த முறையில் தெளிவுபடுத்தி வருகின்றது எனத்தெரிவித்துள்ளார். (ற)

## சமுர்த்தித் திட்டத்தின் கீழ் கடனுதவிகள் வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக் கட்டுப்பாட்டுச் சபையினால் சாவகச்சேரிப் பகுதி சுயதொழில் முயற்சியாளர்கள் 21 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா நிதி தொழில் முயற்சி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேலும் 11பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் 17பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் சுயதொழில் முயற்சிக்கடனாக வழங்கப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சமுர்த்திக் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் ம. விவேகானந்தன் தெரிவித்தார். (த-29)

## இராசி பலன்

**30.10.2004** (ஐப்பசி 14, சனிக்கிழமை)
**துதியை முற்பகல் 10.47 மணிவரை**
**கார்த்திகை பி.ப 4.47 மணிவரை**
**இராகுகாலம் 9.03- 10.33 மணிவரை**
**சுபநேரம் 3.03-4.33 மணிவரை**
**அமிர்தம், கௌரி விரதம், 8ம் நாள்**

**மேடம்** கடின வார்த்தை, காரிய தாமதம், தனவிரயம், அமைதிக் குறைவு.

**இடபம்** கற்பனை மிகுதி, காரிய சிந்தை, போசன நன்மை, நல்ல செய்தி.

**மிதுனம்** பிரயாணம், அமைதிக் குறைவு, பொருள் விரயம், வேலைச் சுமை.

**கடகம்** எடுத்தகருமங்கள் கைகூடும், பெருமையடைதல், நல்லவருமானம், மனமகிழ்ச்சி

**சிங்கம்** மேன்மை, நல்லசெய்தியறிதல், தொழில் சிந்தை, முயற்சி பலிதம்.

**கன்னி** புதிய திட்டமிடல், பிரயாணம், வீண் பயம், காரிய தாமதம்.

**துலாம்** எதிர்பாராத பிரச்சினை, வாகன பயம், உறவினர் வெறுப்பு, காரிய தாமதம்.

**விருச்சிகம்** களஸ்திரநன்மை, நல்லவரவேற்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், உற்சாகம்.

**தனுசு** சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், தொழில் முன்னேற்றம், விருந்துபசாரம்.

**மகரம்** புத்திரரால் கவலை, உடல்நலக் குறைவு, சொத்து பிணக்கு. காரிய தாமதம்.

**கும்பம்** மாதாசுகம், மனசஞ்சலம், ரோகநிலை, வேலைச்சுமை.

**மீனம்** தடைப்பட்டகாரியம் கைகூடும், நல்லசெய்தி, போசனசுகம், பெருமையடைதல.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

- வளவன்

## நீதிமன்றக் கட்டடங்களை புனரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றக் கட்டடங்களைப் புனரமைப்பதற்கான திட்டமொன்றை நீதி அமைச்சு ஆரம்பித்துள்ளது. இந்தத் திட்டத்தின் படி நீதிமன்றக் காணிகளில் புதிதாகக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி, கண்டி, கேகாலை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இவ்வேலைத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, நீதித்துறையில் உள்ள வெற்றிடங்களை நிரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-8)

## பாராளுமன்றில் விற்கப்படும் உணவுகளின் விலைகள் 10 மடங்கால் அதிகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்றத்தில் கடமையாற்றுபவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலை 10 மடங்கினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 6 ரூபாவாகவிருந்த காலை உணவு 60 ரூபாவாகவும்,15ரூபாவாக இருந்த மதியஉணவு 150 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல பிரதியமைச்சர் மகிந்த அமரவீர முன்வைத்த யோசனைகளின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ற-121)

## ஆலய நிதியை துஷ்பிரயோகம் செய்தவருக்கு திராக மனுத் தாக்கல்!

(கொழும்பு)

செட்டித்தெரு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின 3 கோடி 50 இலட்சம் ரூபா நிதியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சிதம்பரம் சுப்பிரமணியம் செட்டியாருக்கு எதிராக நீதிமன்றில் அண்மையில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு பிரதம நீதிவான் குசலா சறோஜினி வீரவர்த்தன ஸ்ரீகதிர்வேலாயுத ஆலய நிர்வாக மற்றும் கணக்குப் பதிவுப் புத்தகங்கள் அனைத்தையும் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சீ.ஐ.டி. பிரிவினரைப் பணித்துள்ளார். (க-60)

## பெரியவிளான் கிராமத்திற்கு சிவநேசன் எம்.பி நிதியுதவி

(பொன்னாலை)

பெரியவிளான் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவநேசன் முன்வந்துள்ளார்.

இது தொடர்பாக வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளருக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில், பெரியவிளான் கிராமத்தை துரித அபிவிருத்தி செய்வதற்கு வசதியாக இக்கிராமத்தில் உள்ள தேவைகளைத் திரட்டி உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார்.

அத்துடன் உடனடியாக இங்குள்ள புதிய அந்தோனியார் சனசனமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். (ப-49)

## மீள்பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

**அத்தியாயம்-2 தொடர்**

**மு. திருச்செல்வம்**

1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. இந்நாள் வரை இந்திய மக்களின் இறைமை, ஆட்சியுரிமை, ஆட்சிப்பொறுப்பு என்பன பிரிட்டிஷாரிடம் இருந்தன. இந்நாள் வரை பிரிட்டிஷ் மன்னர் இந்திய பேரரசராக விளங்கினார். இந்நாள் வரை பிரிட்டிஷ் பாராளுமன்றமே இந்தியாவிற்குரிய சட்டங்களை இயற்றியது. பின்னர் இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பு யாக்க அவையிடம் அரசியலமைப்பு யாக்கும் உரிமையைப் பிரிட்டன் வழங்கியது. இந்தியாவின் இறைமையும் ஆட்சியுரிமையும் இந்திய அரசியலமைப்பு யாக்க அவையின் மூலம் இந்திய மக்களிடம் மீளளிக்கப்பட்டன.

இந்திய அரசியலமைப்பு யாக்க அவை சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அவை. பிரிட்டன் இந்தியாவிற்கு விடுதலை வழங்கிய பொழுது இருசாராரும் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளுள் ஒன்று தான் இந்திய அரசியலமைப்பு யாக்க அவை. இந்த அவை மூலம், பிரிட்டனிடமிருந்த இந்திய மக்களின் இறைமையும் ஆட்சியுரிமையும் இந்திய மக்களிடம் மீளளிக்க வகை செய்யப்படும் என பிரிட்டிஷாரும் இந்தியர்களும் ஏற்றுக்கொண்டனர்.

இந்திய அரசியலமைப்பு யாக்க அவையை இந்திய மக்கள் ஒரு தலைப்பட்சமாகத் தெரிவு செய்து நியமிக்கவில்லை. இந்திய மக்களின் இறைமையை இந்திய மக்களிடம் சட்ட பூர்வமாக வழங்குவதற்கு பிரிட்டிஷாரும் இந்திய மக்களும் செய்து கொண்ட ஏற்பாடுதான் இந்த அவை யாகும்.

1949இல் இந்திய அரசியலமைப்பு யாக்க அவையால் நிறைவேற்றப்பட்ட புதிய அரசியலமைப்பில், இந்திய மக்களாகிய நாம் இந்திய அரசியலமைப்பு யாக்க அவை மூலம் இந்த அரசியலமைப்பைச் சட்டமாக்கினோம் என்று கூறப்பட்டது. சட்டமாக்கும் உரிமை இந்திய அரசியலமைப்பு யாக்க அவைக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சட்டபூர்வமான வாரிசாக இந்திய அரசியலமைப்பு யாக்க அவை விளங்கியது. இதனால் தான் அந்த அவை அரசியலமைப்பைச் சட்டமாக்கி ஏற்றுக் கொண்டது. இதன் மூலம் பிரிட்டிஷ் ஆட்சியில் நடைமுறையில் இருந்த சட்டங்கள்.விடுதல்ல பெற்ற இந்தியாவிலும் சட்டங்களாயின. சட்டத்தொடர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. ஆட்சியுரிமையும் இறைமையும் சட்டபூர்வமாக இந்தியாவிடம் வழங்கப்பட்டன. பழைய சட்டங்கள், புதிய அரசியலமைப்பு, புதிய சட்டங்கள் இவையாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக விளங்கின.

## இந்தியாவில் தமிழரின் இறைமை

தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களும் இந்திய அரசியலமைப்பு யாக்க அவையில் உறுப்புரிமை பெற்றிருந்தனர். திருவாளர்கள் பட்டாபி சீதாராமையா, சந்தானம், கோபால் அய்யங்கார் போன்ற சட்டமேதைகள் தமிழ் நாட்டில் இருந்து அனுப்பப்பட்டனர்.

முஸ்லிம்களின் பிரதிநிதிகள் அரசியலமைப்பு யாக்க அவையைப் பகிஷ்கரித்தனர். தனி நாடு கோரினார்கள். முஸ்லிம்களின் இறைமை பிரிட்டிஷாரிடமிருந்து பாகிஸ்தானிய அரசியலமைப்பு யாக்க அவை மூலம் முஸ்லிம்களைச் சென்றடைந்ததைப் பார்த்தோம்.

தமிழ் மக்களோ, அரசியலமைப்பு யாக்க அவையைப் புகிஷ்கரிக்கவில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசியலமைப்பு யாக்க அவையில் உறுப்புரிமை பெற்றிருந்தனர்; தமிழ் நாடு தனி அரசாகவேண்டும், தமிழர்களின் இறைமையும் ஆட்சியுரிமையும் தமிழர்கட்கே மீட்கப்பட வேண்டும் என அவர்கள் கோரவில்லை.

எனினும் இத்தகைய எண்ணங்கள் தமிழர்களிடம் இல்லாமல் போகவில்லை. பகுத்தறிவுத் தந்தை ஈரோடு ராமசாமி நாயக்கர் தலைமையில் அமைந்த திராவிடக்கழகம், வட நாட்டு ஆதிக்கம் தமிழர்கள் மேல், திராவிடர்கள் மேல் திணிக்கப்படலாம்; என்வே திராவிடர்கள் தனியாக அரசை அமைக்கவேண்டும் என்ற கருத்தைக்கொண்டிருந்தனர். காஞ்சிபுரம் நடராஜன் அண்ணாத்துரை போன்ற இளைய தலைமுறையினர் தமிழரே தமிழரை ஆட்சி செய்ய வேண்டும் எனக் கருதினர்.

இந்திய அரசியலமைப்பு யாக்க அவையில் இணைந்து ஒப்புதல் கொடுத்துப் பணிபுரிந்து அரசியலமைப்பை உருவாக்கி ஏற்றுக்கொண்டதன் மூலம் தமிழர்கள் தமது இறைமையைத் தனியாகப்பெறமுடியவில்லை. முஸ்லிம்கள் பெற்றது போல் பெறமுடியவில்லை. இந்தியாவில் உள்ள தமிழர்களின் இறைமை சட்டபூர்வமாக மீளளிக்கப்பட்டது. ஏனைய இந்தியர்களுடன் இணைந்து தமது இறைமையைப் பெறத் தமிழர்கள் சட்டபூர்வமான ஒப்புதலை வழங்கியிருந்தனர்.

## ஒரு தலைப்பட்ச முயற்சி

நாட்டில் உள்ள சிலர் கூடினார்கள். நடைமுறையில் உள்ள அரசியலமைப்புச் செயற்பாட்டின் அங்கமான தேர்தலுக்குச் சென்றார்கள். நாங்கள் தெரிவு செய்யப்பட்டால், ஆட்சியமைத்தால், தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் புதிதாக அமைக்கப்படும் அரசியலமைப்பு யாக்க அவை உறுப்பினர்களாகப் பணிபுரிய அழைப்போம் என்றார்கள். இதற்கான அற்றலுரிமையை வாக்காளர்களிடம் கோரினார்கள்.

பாராளுமன்றத்தின் மூலம் நாட்டை ஆட்சி செய்ய உறுப்பினர்களைத் தேர்தலில் மக்கள் தெரிவு செய்கின்றார்கள். அதற்கான ஆற்றலுரிமையை வழங்குகின்றார்கள். பாராளுமன்றத்திற்கு வெளியே இருந்து செயற்பட, அதுவும் அரசியலமைப்பு யாக்க அவையாகச் செயற்பட, வாக்காளர்களிடம் ஆற்றலுரிமை கேருவது ஒரு தலைப்பட்டசமானது. எந்த அரசியலமைப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்களே அந்த அரசியலமைப்புச் சட்டத்துக்குப்புறம்பான, தொடர்பில்லாத புதிய அரசியலமைப்பைத் தயாரிக்க, ஏற்க நடைமுறைப்படுத்த ஆற்றலுரிமை கோருவது ஒரு தலைப்பட்சமானது.

இந்திய விடுதலைப்போரின் வெற்றி, பிரிட்டனும் இந்தியாவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இந்திய மக்களிடம் இறைமையும் ஆட்சியுரிமையும் வழங்கப்பட்டமைதான். போரில் வெற்றி பெற்றோ, இரு சாராரும் ஏற்றுக்கொள்ளும் ஒப்பந்தங்கள் மூலமோ, சட்டத் தொடர்புடைய ஆட்சியுரிமை மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் அரசியல் எழுச்சி மூலம் சட்டத் தொடர்பில்லா ஆட்சியுரிமை மாற்றங்கள் எழுவது அரிது. அண்மைக்காலங்களில் ரொடீஷியா, சூடான் போன்ற நாடுகளில் இத்தகைய சட்டத்தொடர்பில்லாத அரசியலமைப்புக்கள் எழுந்துள்ளன. இவை அரசியல் எழுச்சி மூலம் எழுந்தன.

## ரொடீஷியாவில் நடந்தமை


ரொடீஷியாவில் கணிசமான அளவு ஆங்கிலேயர்கள் குடியேறியிருந்தார்கள். தென் ஆபிரிக்கா நாட்டில் உள்ள வெள்ளையர் ஆட்சி, ஆங்கிலேயர் ரொடீஷியாவில் குடியேறுவதற்கும், உடைமைகளைப்பெறுவதற்கும் ஏதுவாக இருந்தது. பிரிட்டனின் ஆட்சிக்குட்பட்ட நாடாக இருந்தமையால், ரொடீஷியாவின் ஆட்சித்துறைகள் அனைத்திலும் வெள்ளையரின் கைமேலோங்கி நின்றது.

(தொடரும்)



பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட முதியோர் தின விழாவில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி முதியோர் ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் அருகில் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமாரையும் படத்தில் காணலாம்.

(படம்: மருதங்கேணி செய்தியாளர்)



அகில இலங்கை ரீதியில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக் குழுவால் நடாத்தப்பட்ட ஆங்கில கட்டுரைப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவி சுதாயினி சிவகுமார் புத்தாக்குநர் ஆணைக்குழுச் செயலாளரிடமிருந்து பரிசில் பெறுகிறார்.

(படம்: பரு.நிருபர்)



புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் அதிபர் த.ஞானப்பிரகாசம், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் ஆகியோர் பாண்ட் வாத்திய இசையுடன் விழா மேடைக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: அல்லைப்பிட்டி நிருபர்)

## விவாத அரங்கு - 6

விடயம்

**மதுமாற்றத் தடைச் சட்டம்**
**தேவையானதா?**
**தேவையற்றதா?**

நடுவர் : விதுரன்


உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி*

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# ரஷ்ய நிலக்கரி சுரங்கத்தில் விபத்து 18பேர் பலியாயினர் 23பேர் படுகாயம்

## 5பேரைக் காணவில்லை மீட்புப்பணிகள் தொடர்கின்றன



(மொஸ்கோ)

ரஷ்யாவில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 18பேர் பலியாயினர்.

ரஷ்யாவில் சுரங்க விபத்து என்பது வாடிக்கையாகிவிட்டது. கடந்த ஏப்ரல் மாதம் நடந்த சுரங்க விபத்தில் 45பேர் பலியாயினர். இந்நிலையில், நேற்றுக் காலை, கமிரோவோ அருகேயுள்ள பெலோவ் பகுதியில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 18பே பலியாயினர். 23பே படுகாயமடைநதனர். ஐந்து பேரைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் கிமிரோவோ என்ற இடத்திற்கு அருகே உள்ள நிலக்கரிச் சுரங்கததினுள் வழமைபோல 30ற்கும் மேற்பட்ட சுரங்கத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அச்சுரங்கத்திற்கு செல்லும் வாயுக்குழாய் சிலிண்டர்களில் திடீரென வெடிப்பு ஏற்பட்டது.

இதன் காரணமாக சுரங்கத்தின் சுவர்கள் இடிந்துவிழத் தொடங்கின.

இதனுள் சிக்கிக்கொண்ட 18 பேரும் பலியானார்கள். ஏனையோர் [illegible]வாறாக தப்பிக்கொண்டனர்.

இவ்விபத்திற்கு சுரங்கத்தினுள் வாயுச்செலுத்திக் குழாய்களையும் சிலிண்டர்களையும் பொருத்திய நிபுணர்கள் விட்ட தவறே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் காணாமல் போன 5பேரையும் மீட்பதற்கான பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.


இதில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் 23பேரில் பேரினது நிலைமைகள் மோசமாக இருப்பதாகவும் அவர்களுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ப)



மும்பையில் பாலிவுட் நடிகை ஐஸ்வர்யாராய் தனது பிறந்தநாளையொட்டி ஏழைக் குழந்தைகளுக்கு கண் கண்ணாடி வழங்கி கொண்டாடியபோது பிடித்த படம்.

# காஷ்மீரின் கிராம மக்களுக்கு பாக். தீவிரவாதிகளால் மிரட்டல்

## இந்திய இராணுவ அதிகாரி தகவல்



(தேனி)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளின் மிரட்டுதலால் கிராம மக்கள் அவர்களுக்கு அடிபணிந்து நடக்கின்றனர் என இந்திய இராணுவ அதிகாரி சண்முகம் தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பலியான இராமராஜின் உடல் அவரது சொந்த ஊரான தேனி மாவட்டம் ஆணைமலையான் பட்டிக்கு கொண்டுவரப்பட்டது. அவர் பணிபுரிந்த முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் சண்முகம், நிர்மல்சிங், இராணுவ வீரர் சுதாகரன் ஆகியோர் உடலைக் கொண்டுவந்தனர்.


இராணுவ அதிகாரி சண்முகம் கூறுகையில், பாகிஸ்தான் தீவிரவாதிகளின் தாக்குதல் தற்போது அதிகரித்துள்ளது. குறிப்பாக ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஆரன்கோடு தாலுகாவில் கிராம மக்கள் தீவிரவாதிகளின் மிரட்டலுக்குப் பயந்து அவர்களுக்கு ஒத்துழைக்கின்றனர். இதனால்தான் ஊடுருவல் நடக்கிறது. இதை நாங்கள் முறியடித்து வருகிறோம்.

ஊடுருவல் செய்த தீவிரவாதிகளுக்கும் எங்களுக்கும் நடந்த சண்டையில் தான் ராமராஜ் இறந்துவிட்டார். அவரின் இழப்பு எங்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்றார். (ப)

WORLD NEWS
உலக தரிசனம்

## ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில்

# இராணுவ வாகனம் மீது குண்டு தாக்குதல் 3 பேர் பலியாயினர் 2பேர் படுகாயம்



(பாக்தாக்)

ஈராக்கில் பாக்தாத் நகரில் அமெரிக்க இராணுவ வாகனம் மது நடத்தப்பட்ட கார் குண்டுத் தாக்குதலில் அமெரிக்கவீரர் இருவர் உட்பட 3பேர் பலியானதுடன் இருவர் காயமடைந்தனர்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவ வாகனம் மீது தீவிரவாதிகளின் குண்டுகள் பொருத்தப்பட்ட கார் மோதியது.

இச்சம்பவத்தையடுத்து, ஈராக்கில் கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இறந்த அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை 1,103 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கிடையே பாக்தாத்தின் தெற்குப் பகுதியில் வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்த கிடங்கிலிருந்து காணாமல் போன ஏராளமான வெடிபொருட்கள் தங்கள் வசம் உள்ளதாக அல்-இஸ்லாம் இராணுவம் என்ற தீவிரவாதக்குழு அறிவித்துள்ளது.

கடவுளின் கருணையாலும், சில அதிகாரிகள், அமெரிக்க வீரர்களின் ஒத்துழைப்பாலும் இவை கிடைத்திருப்பதாகவும் அந்தக் குழு கூறியுள்ளது.

ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எதிராகவும், அவர்களுக்கு உதவுபவர்களுக்கு எதிராகவும் இவற்றைப் பயன்படுத்தப் போவதாகவும் தீவிரவாதிகள் கூறியுள்ளனர். (ப)


# இஸ்ரேலிய படைகள் தாக்குதல்

(ஜெனின்)

பாலஸ்தீன நாட்டில் மேற்குக் கரைப்பகுதியில் உள்ள ஜெனின் நகருக்குள் இஸ்ரேலிய துருப்புகள் புதன்கிழமை நுழைந்து தாக்குதல் நடத்தின.

இதையடுத்து அங்கு கடும் சண்டை மூண்டது. ஜெனின் நகரில் நுழைந்த இஸ்ரேலிய படைகள் அங்குள்ள அகதிகள் முகாம் மீது தீவிர தாக்குதலை நடத்தின. மேலும் அப்பகுதியிலுள்ள வீடுகளைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதேபோல் கடந்த மாதம் இஸ்லாமிய விடுதலை இயக்கத் தீவிரவாதி அகமது சலாபியைக் குறிவைத்து ஜெனின் நகர் மீது இஸ்ரேலியத் துருப்புகள் நடத்திய தாக்குதலில் 2 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். (ப)



மத்திய அமெரிக்காவிலுள்ள குவேதிமலா நகரிலிருந்து 50 மீற்றர் தொலைவில் இருக்கும் சான் ஜுவான் ஸ்கேதி என்ற இடத்தில் பொதுமக்கள் பஸ் கட்டண உயர்வை எதிர்த்து போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். நம்ம ஊரில் எதிர்ப்பை காட்ட பஸ்மீது கல் வசுவார்கள். இன்னும் ஓவராகப் போனால் தீ வைப்பார்கள். ஆனால் அந்த ஊரில் பஸ்சையே தலைகீழாக உருட்டித் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

# அரபாத் சிகிச்சைகளுக்காக பிரான்ஸ் கொண்டு செல்லப்பட்டார்

(ரமல்லா)

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதை யடுத்து, அவர் ரமல்லாவிற்கு அருகிலுள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டும் பலன் இல்லாததால் அவர் பிரான்ஸ் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. கடந்த மூன்று வருடங்களுக்குப் பிறகு முதன் முறையாக ரமல்லா வளாகத்திலிருந்து அரபாத் வெளியே வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் உடல்நலம் பாதிக்கப்பட்டதையடுத்து அவர் பாரீஸ் கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதையும் அவருடன் செல்வதற்காக அவரது மனைவி சுஹா அரபாத் இஸ்ரேல் - ஜோர்டன் இடையில் உள்ள விமான நிறுத்தத்தில் இறங்கிச் செல்வதையும் படங்களில் காணலாம்.

# தம்பதிக்கு ஒரு குழந்தை விதி

சீனாவில் ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை என்ற விதி காரணமாக 30கோடி குழந்தைகள் பிறப்பது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் சீனா ஆண்டுகளுக்கு 9 சதவீதப் பொருளாதார வளர்ச்சியை எட்டும வாய்ப்பினைப் பெற்றுள்ளது.


சீனாவின் மக்கள் தொகை மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டு அமைசசர் ஜாங் வெய்கிங் இதைத் தெரிவித்தார். சனாவின் தற்போதைய மக்கள் தொகை 130கோடி. குடும்பக்கட்டுப்பாட்டு முறை மூலம் ஏறத்தாழ நான்கில் ஒரு மடங்கு மக்கள் தொகை அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தம்பதிக்கு ஒரு குழந்தை விதி மூலம் சமூக, பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் நிர்ப்பந்தம் குறைந்திருப்பதாக தெரிவித்த வெய்கிங் தடைகள் இன்னும் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

# மனித நேயப் பண்புகளை சித்தரிக்கும் முகமாலை சேகரின் 'கொட்டுக்கடப்பு'

## திறனாய்வுக்களம்

**வி**ழிப்புலன் இழந்த இளைஞர், ஆனால் தன் அகப்புலனால் விழிப்புலன் உள்ளவர்கள் கூட




கண்டனுபவித்துக் கூற முடியாத பல விடயங்களைத் தனது சிறு கதையிலே நேரில் கண்ணால் கண்டது போல எழுதியிருப்பது வியப்புக்குரியது.

பிறக்கும் போதே விழிப்புலன் அற்றவராகப் பிறந்த போதிலும் அவரது தாய், தந்தை, சகோதரர்கள் காட்டிய அக்கறை, அவர்

**நல்லை மன்னன்**

முன்னேற்றத்துக்காகச் செய்த அர்ப்பணிப்புக்கள் இன்று அவரையொரு பட்டதாரி இளைஞனாக மாத்திரமல்ல; நல்ல கதாசிரியனாக, கவிஞனாக, இசை வல்லுநனாக உருவாக்கியுள்ளன. அவரது "கொட்டுக்கடப்பு" சிறுகதைத் தொகுதியை வாசிக்கும் போது உணரக் கூடியதாக இருக்கிறது.

"யுத்த அனர்த்தம் காரணமாக இரண்டு வருடங்கள் கைதடி நபீல்ட் பாடசாலை இயங்காதிருந்த போது வீட்டில் முடங்க வேண்டியதாயிற்று. என் பொழுதுகள் சூனியமாகிவிடக் கூடாது என்பதில் அப்பாவுக்கு மிகுந்த அக்கறை. அதனால் மதிய உணவின் பின் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் எனக்குரிய நேரம். பத்திரிகைகள், நாவல்கள், சிறுகதைகள், பயனுள்ள கட்டுரைகள் எனப் பலவற்றையும் உரத்துப் படித்துக் காட்டுவார். அது என் அறிவை விசாலத்துக் கொள்ளப் பெரிதும் உதவியது..." எனக் கூறும் அவர், தந்தையாரிடம் தான் கல்வி கற்ற சூழ்நிலையை ஒரு சிறுகதை போலச் சுவாரஸ்யமாகச் சித்தரிக்கிறார் தமது முன்னுரையில்.

".... கிடுகால் வேயப்பட்டு நிலம் சாணகத்தால் நேர்த்தியாக மெழுகப்பட்ட கொட்டில், அதனுள் அப்பா சாய்மனையில் படுத்திருந்து அனைத்தையும் உரத்து வாசிப்பார். அங்கிருந்த வாங்கில் நான் அமர்ந்திருந்து செவிமடுப்பேன்........ அதே நேரம் செட்டியார் துண்டு தென்னையின் தலை தடவி வரும் தென்றல் எங்கள் அனைவரையும் தழுவிச் செல்லும். அந்தப் பசுமையான நினைவுகள் இன்றும் என் நெஞ்சில் ஈரமாய் இருக்கிறது....." என்று முகமாலையிலே தமது இளமைப் பருவத்தை நினைவூட்டும் கதாசிரியர், முகமாலையை விட்டு வலிகாமத்துக்கு இடம்பெயர்ந்த பின் என்ன நிகழ்ந்தது என்பதை உருக்கமாகக் கூறுகிறார்.

"......... கொட்டில், சாய்மனைக் கதிரை, தடவி வரும் தென்றல் இவையென்றும் இப்பொழுது இல்லை. இச் சிறுகதைத் தொகுதி வெளிவரும் போது என் தாய், தந்தையர் கூட இல்லை எனக் கூறும் போது அவருடன் சேர்ந்து வாசகர்களும் உருகும் நிலை ஏற்படுகிறது.

"அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்" என ஆரம்பித்து "இற்றைத் திங்கள் இவ் வெண்ணிலவில் தந்தையும் இலமே" என்ற பாரிமகளிர் புலம்பலை இது ஞாபகமூட்டுகிறது.

14 சிறுகதைகளை உள்ளடக்கிய இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள அத்தனை சிறுகதைகளும் காலத்துக்குக் காலம் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்தன. மக்களின் அன்றாட வாழ்வு, சமகாலப் பிரச்சினை, மனிதநேயப் பண்புகள் முதலிய வற்றை கருவாகக் கொண்டன.

ஒவ்வொரு சிறுகதையையும் வாசிக்கும் போது அவை நம்முன் நடப்பன போன்ற உணர்வை உணரமுடிகிறது. 'அடாவடி' என்ற சிறுகதையில் வரும் அட்டகாசம் புரியும் விடலைகளை நாம் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு இடங்களில் சந்தித்திருக்கிறோமே என்ற உணர்வு ஏற்படுத்துகிறது.

முதியோர் (பெண்கள்) அனாதை விடுதியில் நடக்கும் சம்பவங்கள், அங்கு வசிக்கும் முதியவர்கள் ஒருவர் மீதொருவர் காட்டும் அக்கறை, அனாதை விடுதியில் வாழ்ந்தாலும் தான் இறந்த பின் தனது உடல் மருத்துவபீடத்துக்குக் கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறிய தங்கம்மாக் கிழவி, மேல் நாட்டில் குடியேறி பெற்ற தாய் தந்தையரை அனாதை விடுதிகளில் அல்லலுற வைக்கும் வெளிநாட்டுக் குடிமக்கள் எனப் பல்வேறு பாத்திரங்களை வைத்துப் பின்னப்பட்டிருக்கிறது 'கொட்டுக்கடப்பு' என்ற சிறுகதை

இப்படியாக நல்ல பல சிறுகதைகளைக் கொண்டிருந்த போதிலும் தொகுதியைக் கையிலெடுத்தவுடன் மனதை நெருடச் செய்கிறது. மோசமான அச்சமைப்பும் அட்டைப்பட அமைப்பும் ஏதோ கண்ட படி வர்ணத்தை வாரி இறைத்தது போனற அட்டைப்படம், பூதக் கண்ணாடி வைத்துத்தான் வாசிக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தும். மிகமிகச் சிறிய எழுத்துக்கள், பக்கத்துக்குப் பக்கம் மலிந்துகிடக்கும் எழுத்துப் பிழைகள் பொற்குடத்துக்குச் சேறு பூசிய நிலையை உண்டாக்குகிறது.

இவை தவிர்க்கப்பட்டு நல்ல முறையில் அச்சிடப்பட்டிருந்தால் இச் சிறுகதைத் தொகுதியின் மதிப்பே தனிதான். □

நூல் :- கொட்டுக்கடப்பு (சிறுகதைத் தொகுதி)
ஆசிரியர் :- முகமாலை சேகர்
விலை :- ரூபா 200/=

---

## ஐயந்த தனபால பதவி விலகுவதாக வெளிவந்த செய்திக்கு மறுப்பு

(கொழும்பு)

சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தனது பதவியிலிருந்து விலகப் போவதாக வெளியான தகவலை சமாதான செயலக ஊடகப் பொறுப்பாளர் சாமினி சேரசிங்க மறுத்துள்ளார்.

ஆங்கில இணையத் தளமொன்றில் முதலில் வெளியான இச்செய்தி குறித்து அவர் தெரிவிக்கையில், ஜயந்த தனபால அவரின் பதவியிலிருந்து விலகுவதற்கு எந்தவித காரணமும் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கான சாத்தியக் கூறுகள் தோன்றியுள்ள நிலையில் இவ்வாறான பொறுப்பற்ற செய்திகளை வெளியிடுவதால் சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பேற்படுகின்றதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒருவார விடுமுறையில் பர்மா சென்றுள்ள ஜயந்த தனபால நாடு திரும்பியதும் வழக்கம் போன்று தனது கடமைகளை முன்னெடுத்துச் செல்வார் என்றும்,

சமாதான செயலகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஜயந்த தனபால அடுத்த வருடம் யூன் வரைக்கும் செயலாளர் பதவியை வகிப்பார் எனவும் மேலும் தெரிவித்தார். (க)



*குட்டியப்புலம் அ.த.க.பாடசாலையில் இடம்பெற்ற ஆசிரியர் தின விழாவில், பாடசாலை அதிபர் செ.கந்தசாமியையும் ஆசிரியர்களையும் மாணவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்ற காட்சி.*

---

### சாவகச்சேரி நகரப் பகுதிகளில்

## பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த விசேடதிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

இதில் முதற்கட்டமாக சாவகச்சேரி நகரின் வர்த்தகர்கள் பொலித்தீன் பாவனையை குறைக்குமாறும் பதிலீடாக கடதாசிப பைகளைப் பாவனை செய்யுமாறும் பொலித்தீன் கழிவுகளை கண்டபடி எறியாமல் அவற்றை குப்பைத்தொட்டிகளில் சேகரித்து குப்பை அகற்றும் வாகனங்களில் ஒப்படைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

நமது சுற்றுச் சூழலிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு சகல மக்களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (ப-127)

---

## வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தில் விடுபட்ட பட்டதாரிகள் முறையிடலாம்

### பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தில் விடுபட்டவர்கள் தம்மிடம் முறையிடுமாறு கல்விப் பிரதி அமைச்சர் மிகிந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அரசின் திட்டத்தில் இணைந்து கொள்ளாதவர்களும் பயிற்சிக்காக அழைக்கப்படாதவர்களும் அவ்வாறு முறையிடும் பட்சத்தில் அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப பரீட்சையில் சித்தியடைந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-60)

---

### கலாசார விழாவும் பரிசளிப்பு வைபவமும்

(யாழ்ப்பாணம்)

சங்கானைக் கல்விக்கோட்ட சைவ கலாசார மேம்பாட்டு விழாவும், பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு வட்டு மத்திய கல்லூரி (ஆரம்பப் பிரிவுப் பாடசாலை) யில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளன. (ற)

### கட்டாக்காலிகளால் தொல்லை

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இதனால் இப் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், கால் நடைகளின் உரிமையாளர்கள் தமது கால் நடைகளைக் கட்டுப்படுத்தவில்லை என கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-246)

### படுகாயம்

(பொன்னாலை)

வீடொன்றின் கூரை வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபரொருவர் தவறி விழுந்ததில் படுகாயமடைந்தார்.

இச் சம்பவத்தில் பொன்னாலை மேற்கைச் சேர்ந்த எஸ்.இந்திரன் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ப-49)

### விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிடமாகவுள்ள நூலகர் தரம் III, இலங்கைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் II 'ஆ' (சிவில்) பதவிகளை நிரப்புவதற்காக போட்டிப் பரீட்சைகளிற்கான விண்ணப்பங்கள் வடக்கு - கிழகக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சைக்கான விணணப்பங்களை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-47)

### விசனம்

(காரைநகர்)

காரைநகர் சாலையில் வட பிராந்திய போக்குவரத்து சபை பஸ் வண்டிகள் ஒழுங்கின்றி சேவையாற்றுவதாக பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால், குறித்த நேரத்தில் பயணத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-246)

---

## திருமந்திர மாநாடு இணுவிலில் நடைபெற்றது

(இணுவில்)

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் இணுவில் மஞ்சத்தடி விவேகானந்த கிராம முன்னேற்றச் சங்கத்தின் அனுசரனையுடன் ஏற்பாடு செய்திருந்த திருமந்திர மாநாடு கடந்த புதன் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இணுவில் மஞ்சத்தடி முருகன ஆலய மண்டபத்தில் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

சிவத்திரு அ.செல்லத்துரை சுவாமிகள் நந்திக்கொடி ஏற்றி இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து மங்கள விளக்கினை யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத தலைவர் தேவராஜா, ஆசிரியர் பஞ்சாட்சரமணி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

ஆசியுரையினை அ.செல்லத்துரை சுவாமிகள் வழங்கினார்.

வரவேற்புரையினை மஞ்சத்தடி முருகன் ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்த செ.சிவலிங்கம் நிகழ்த்த 'தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவை யாழ்.பல்கலைக்கழக இளைப்பாறிய பேராசிரியர் ச.விநாயகமூர்த்தி வழங்கினார். (ப-122)

# அனைத்துத் தரப்பினருடனும் பேசிய பின்பே சர்வதேசத்தின் நிலைப்பாடு அறிவிக்கப்படும்

## யசூஸி அகாஸி தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடாத்திய பின்னர், அது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளதாக ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஸி அகாஸி தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடாத்தி தற்போதைய நிலைமைகள் குறித்து அறிந்து கொள்வதே தனது விஜயத்தின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமருடன் நடாத்திய பேச்சுவார்த்தை மிகவும் நம்பிக்கை உடையதாக அமைந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்தும் சமாதானம் தொடர்பாக அரசு கொண்டுள்ள எதிர்பார்ப்புகள் பற்றியும் இச் சந்திப்பில் தனக்குத் தெளிவுபடுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.



தற்போது வெளிநாட்டிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் வருகையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்று விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடாத்தவுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இத்தச் சந்திப்புக்கள் பயன் உள்ளதாக அமையுமென்று தாம் நம்புவதாகவும் தெரிவித்தார். (ற-8)

## கூட்டம்

(சாவகச்சேரி)

சில காலமாக இயங்காது இருந்த சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினை மீள இயக்குவது குறித்து நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி வைத்தியசாலை மண்டபத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.அம்பிகைபாகன் தலைமையில் இக் கூட்டம் இடம்பெறவுள்ளது. (ப-29)

## சாவகச்சேரி மாணவி இரண்டாம் இடம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆரம்ப பிரிவு மாணவி தவயோகராசா அபிநயா வவுனியாவில் நடாத்தப்பட்ட தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியின் எழுத்தாக்கப் போட்டி பிரிவு I இல் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் இவ்வாண்டு நடாத்தப்பட்ட தரம் 5ற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-29)

## வடமராட்சி பகுதியைச் சேர்ந்த 60 வீதமான முன்பள்ளி சிறார்கள் போஷாக்கின்மையால் பாதிப்பு

### கல்விப் பணிப்பாளர் சத்தியசீலன் தகவல்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேச முன்பள்ளிகளின் சிறார்களில் 60 சதவீதமானோர் வயதிற்கேற்ற நிறை அற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என முன்பள்ளி வலயக் கல்விப் பணிப்பாளர் து.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

கரவெட்டி குழந்தை யேசு முன்பள்ளியில் பெற்றோர்தின விழாக கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி, முன்பள்ளி மண்டபத்தில் ஆசிரியர் அருட்சகோதரி வசந்தி தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு கியூடெக் நிறுவன யாழ்.மாவட்ட தலைமை அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் சத்தியசீலன் தொடர்ந்தும் உரையாற்றுகையில் 60 சதவீதமான முன்பள்ளி மாணவர்கள் தங்களுடைய வயதிற்கேற்ற நிறையைக் கொண்டிருப்பதில்லை.

இதனை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், அமைப்புக்கள் கவனத்திற் கொண்டு மாணவர்களின் எதிர்காலத்தை வளமபடுத்த உதவவேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (ப-105)

## நீதியாளர்கள் நியமிப்பு?

(கிளிநொச்சி)

இலங்கை நீதிமன்றங்களில் கடமையாற்றுவதற்கென 13 நீதியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என நீதி அமைச்சர் டீ.ஜெ. ஜோன் செனிவிரத்தின தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நியமனம் பெறுபவர்கள் 6 மாத காலப் பயிற்சியைப் பெற்ற பின்னரே சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)


## பொலிஸில் சரண்

(திருகோணமலை)

திருகோணமலை ஈச்சிலம்பற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை தோப்பூர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் கேதாகரன் (வயது 26) என்பவரே சரணடைந்தவராவார். (ச)





நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவை இந்து சமய கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ மகாலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும், விழாவில் பங்கு பற்றிய ஆசிரியர், மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கருணா குழு முகாம் அமைப்பு

### ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசு - விடுதலைப்புலிகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை கண்காணிக்கும் கண்காணிப்புக் குழு பொலநறுவைப் பகுதியை தமது அவதானிப்புக்கு உட்படுத்துவதில்லை என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம்சாட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கபபட்ட கருணா தலைமையிலான குழு, அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளிலேயே தமது முகாம்களை அமைத்து வருகின்றது. பொலநறுவை மாவட்ட சேனபுர கிராமவாசிகள் இக்குழுவின நடமாட்டங்கள் குறித்து புகார் செய்தும், இவ் விடயம் தட்டிக் கழிக்கப்படுவதாகவும் ரவூப் ஹக்கீம் பி.பி.ஸி.யின் சந்தேசிய சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கருணா குழுவின் சட்டவிரோத பணவசூலிப்பு தொடர்பாக பொல நறுவை, சேனபுரம் மக்கள் மட்டுமல்ல கட்டுவன்வில பிரதேச மக்களும் பலமுறை முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.

ஆனால் இலங்கை அரசாங்கத்திற்கோ விடுதலைப் புலிகளுக்கோ இது ஒரு பிரச்சினையாகத் தென்படவில்லை. எது எப்படியிருப்பினும், கடந்த மார்ச் மாதம் புலிகளின் முன்னாள் கிழக்குத் தளபதி கருணா விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்தது முதல், தமிழ் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் பொலநறுவைப் பகுதியில் அதிகரித்து வருவதாக, பொலநறுவை மாவட்டத்திலிருந்து பரவலாகப் புகார்கள் கிளம்பியுள்ளன.

கடந்த 6 ஆம் திகதி பொலநறுவை மாவட்டத்திலுள்ள அத்துகல என்னுமிடத்தில் இரு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். சேனபுரவும், கட்டுவன்விலவும் அத்துகல கிராமத்திற்கு அருகில் உள்ளன. இக் கொலைகள் தொடர்பாக, ஒரு தமிழ்க் குழு மது சந்தேகம் தெரிவித்து நான் பொலிஸில் புகார் செய்திருந்தேன்.

எனினும் பொலிஸ் விசாரணையில் எத்தகைய முன்னேற்றமும் இதுவரை ஏற்படவில்லை. அத்துகல கொலைக்கு ஐந்து நாட்களுக்குப் பின்னர், நாகஸ்தன்ன என்னுமடத்தில் கருணா குழுவைச் சேர்ந்த இருவரை, விடுதலைப் புலிகள் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள்.

இதற்கு முன்னர், பொலநறுவையிலுள்ள பௌத்த விகாரையொனறிலிருந்து கருணா குழுவை சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்பட்ட ஆயுததாரிகள் கைது செய்யபபட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கை இராணுவம் கருணா குழுவுக்கு உதவுவதாக விடுதலைப்புலிகள் கூறி வருகிறார்கள். இதை அரசாங்கம் மறுத்து வருகின்றது. கருணா குழுவுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மோதல்களால் இதுவரை கிழக்கில் குறைந்தபட்சம் 65 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

## விடுமுறை தினங்களிலும் தீபாவளிக்காக கடைதிறப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தீபாவளி பண்டிகை தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களும் இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை பிரதி சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணபபடவேண்டும் எனவும், 11.11.2004 ற்குப் பின் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி சகல வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ற)

## பல்கலைக்கழக கலைப்பீடத்தில் நூல் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் உயர் கல்விசார் நூல்கள, சஞ்சிகைகளின் கண்காட சயும் விற்பனையும் இடம் பெறவுள்ளது.

இக் கண்காட்சியில் பல்கலைக் கழக கலைப்பீடம் வெளியிட்டு வரும் நூல்களும், சஞ்சிகைகளும், கலைப்பீட ஆசிரியர்களின் தனிப்பட்ட வெளியீடுகளும், உயர் கல்விசார் ஏனைய வெளியீடுகளும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. கண்காட்சியின் போது கைவசம் அதிக பிரதிகள் உள்ள நூல்களும், சஞ்சிகைகளும் விற்பனை செய்யப்படும்.

உயர்கல்வி நிறுவனங்கள், அறிவைத் தேடும் ஆசிரியர்கள், மாணவர்கள், அறிவைத் தேடும் பொதுமக்கள் இக கண்காட்சியைப் பார்த்துப் பயன்பெறமுடியும்.

காட்சிக்கு உட்படுத்தக்கூடிய உயர்கல்விசார் நூல்களை எழுதிய ஆசிரியர்கள் அல்லது வெளியீட்டாளர்கள தமது நூல்களை இக் கண்காட்சியில் காட்சிப்படுத்தலாம்.

கண்காட்சியில் இடம்பெறத்தக்க நூல்கள், சஞ்சிகைகளைக் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பதாக ஒப்படைக்கும்படி கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன் கேட்டுள்ளார். (ற)

# 35 ஆண்டுகளுக்குப் பின்னர்

## இந்திய மண்ணில் சாதனை படைக்கும் வாய்ப்பு

## அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிக்கு கிடைத்துள்ளது


இந்திய மண்ணில் 35ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் தொடரைக் கைப்பற்றும் வாய்ப்பு மிக அருகே நெருங்கிவிட்டது. அவுஸ்திரேலிய நாக்பூர் டெஸ்ட் முடிவு அந்த அணிக்குச் சாதகமாகிவிட்டது.



மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலியா 415ரன்கள் பெற்று முன்னிலை பெற்றுளளது. வருத்தமான உண்மை அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி உலகெங்கும் வெற்றிகளைக் குவித்தாலும் இந்திய மண்ணில் டெஸ்ட் தொடர் ஜெயிப்பது மட்டும் கனவாகவே இருந்து வந்தது.


1969-70இல் பல்லாரி தலைமையில் இங்கு ஜெயித்ததற்குப் பிறகு கிம் ஹியூக்ஸ், ஆலன் பார்டர், மார்க் டெய்லர், ஸ்டீவ் வாக் யாராலும் முடியாத விஷயமாக இருந்தது டெஸ்ட் தொடர் வெற்றி. இப்படி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பெருமையை இந்தியா இம்முறை இழக்கும் அபாயத்தில் இருப்பது வருத்தமான உண்மை.

ஒரு மணி நேரத்தில் இந்தியாவுக்கு எதிரான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பெங்களூரில் ஜெயித்த அவுஸ்திரேலியா 1-0என்ற முன்னிலை வகிக்கிறது. சென்னை டெஸ்ட் சமநிலையில் முடிய, இப்பொழுது மூன்றாவது டெஸ்ட் நாக்பூரில் நடக்கிறது. முதல் இன்னிங்ஸ் அவுஸ்திரேலியா 398 ரன்கள் குவித்தது இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெற்றுக்கு 146ரண்கள் என்ற பரிதாப நிலையில் இருந்த இந்திய அணி மூன்றாம் நாள் ஆட்டம் தொடங்கிய ஒருமணி நேரத்தில் முதல் இன்னிங்சை இழந்தது. கைப் 55 ஒரே நம்பிக்கையாக இருந்த முகமது கைப் மட்டும் 55 ரணகள் அடித்தார். இந்தத் தொடரில் அவர் தொடர்ச்சியாக அடிககும் இரண்டாவது அரைசதம் இது. மற்றவர்கள் யாரும் நிற்க முடியவில்லை. 185 ரண்களுக்கு இந்தியா ஆட்டமிழந்தது. கடந்த கால அனுபவங்கள் காரணமாக இந்தியாவுக்கு பாலோ-ஆன் வழங்காமல், தானே பேடசெய்ய இறங்கியது அவுஸ்திரேலியா. படுநிதானம் வழக்கம் போல பாரத்திவ, லட்சுமன போன்றவர்களின் நழுவல்கள தொடர்ந்தன. ஸ்கோா 19ஆக இருந்த போது, ஹைடன்



ஸ்டெம்பை கழட்டினார் ஜாகிர்கான்.

நேற்று முன்தினம் அவரது பந்துவச்சு அனல் பறந்தது. அடுத்து வந்த சைமன் கேடிச், ஜஸ்டின் லாங்கர் இணைந்து படு நிதான ஆட்டம் ஆடினர். உணவு இடைவேளைக்குப் பிறகு அந்த அணியின் ரண்-ரேட் இரண்டுக்கும் குறைவாக இருந்தது. ஸ்கோரை உயர்த்தும் நோக்கில் அடிக்க முயற்சி செய்து முரளி கார்த்திக் பந்தில்



ஆட்டமிழந்தார். லாங்கர் (30) கேடிச் பரிதாபம் மறுமுனையில் சைமன் கேடிச அருமையாக விளையாடினார்.

எந்தப் பதட்டமும் இன்றி இந்தியப் பந்துவீச்சை அவர் கையாண்டார். சிறப்பாக விளையாடிய கேடிச் துரதிர்ஷ்டவசமாக 99 ரண்களில் ஆட்டமிழந்து, ஒரு ரண்னில் சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். கடைசி நேரத்தில் மார்ட்டின் (41) கிளார்க் (10) ஜோடி விறுவிறுவென ஸ்கோரை ஏற்றியது. மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸில் *3 விக்கெற்றுக்கு 202 ரண்கள் எடுத்துள்ளது. இதன் மூலம் 415 ரண்கள் முன்னிலை பெற்றுவிட்டது அந்த அணி. பரமாண்ட இலக்கு நேற்று மேலும் துரிதமாக கொஞ்சம் ரணகள் சேர்த்த பிறகு பிரமாண்ட இலக்கு நிர்ணயித்து டிகளேர் செய்யும் அவுஸ்திரேலியா கடைசி இரு நாட்களில் நமது அணி அவர்கள் இலக்கை சேஸ் செய்வது என்பது சாத்தியத்திற்கு அப்பாற்பட்ட விஷயம். ஆடுகளமும் ஒத்துளைக்காது. அவுஸ்திரேலிய மெக்ராத், கில்லெஸ்பி, வார்னை சமாளிப்பதும் கடினம்.

டெஸ்ட் தொடர் மொத்தத்தில் எந்த நோக்கத்துடன் இந்தியா வந்ததோ, அந்த நோக்கத்தை சாதித்துக் கொள்ளப்போகிறது அவுஸ்திரேலியா. இங்கு வென்றால் 2-0 என்ற முன்னிலையில் தொடர் அவர்கள் வசமாகிவிடும். 35ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அவர்களுக்கு டெஸ்ட் தொடர் இந்திய மண்ணில கிடைக்கப்போகிறது. இந்திய ரசிகர்களுக்க இது வருத்தமான விஷயம் தான்.

உலகின் தலைசிறந்த பட்ஸ்மேன்கள ஒழுங்காக விளையாடாத போது, தோல்விகளை ஏற்றுத்தானே தீரவேண்டும்.

ஸ்டீவ் வாக் ஓய்வுக்குப்பிறகு அவுஸ்திரேலிய அணியில் அவரது இடத்தைப் பூர்த்திசெய்பவர் சைமன் கேடிச். மிகச்சிறந்த பட்ஸ்மன சதத்தை நேற்று முன்தினம் படுவேகமாக நெருங்கிக் கொண்டிருந்தார். 99 ரணகள் முரளி கார்த்திக் பந்தை தட்டிவிட்டு ஒரு ரண் எடுத்தால் இந்திய மண்ணில் முதல் சதம். அவரது டெஸ்ட் வாழ்க்கையில் இரணடாவது சதம் அவுஸ்திரேலிய ரசிகர்கள் கொண்டாட்டத்துக்கு தயாராக அரங்கில். கார்த்திக வீசிய பந்தை கணிக்கத் தவறி, காலில் கேடிச் வாஙக. அடுத்த வினாடியே விரலை உயர்த்தி விட்டார் அம்பியர் டேவிட்.

ஷெப்பர்ட் கேடிச் அவுட் அரங்கில் அவுஸ்திரேலிய ரசிகர்கள் சேர்ந்து உடகார்ந்துவிட்டனர். ஆனாலும் பரவாயில்லை. சதம் அடித்தால் கூட கிடைக்காத ஒரு வாய்ப்பு சைமனுக்குக் கிடைத்திருக்கிறது. டெஸ்ட போட்டிகளில் 99 ரணகளில் ஆட்டமிழக்கும் 5ஆவது அவுஸ்திரேலிய பட்ஸ்மேன் என்று வரலாற் றில் அவரது பெயர் இடம்பிடித்துவிட்டது.

## வாய்ப்பிழந்த இந்தியா

கனடாவில் உள்ள ரிசமாண்டில் நடைபெற்றுவரும் உலக ஜூனியர் பட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் முன்னேற்றம் முடிவுக்கு வந்தது.

சீன தைபே வீராங்கனைகளுடன் இரட்டையர் பிரிவில் போட்டியிட்ட இந்தியாவின் சாய்னா நெஹ்வால் அபர்ணா பாலன் ஜோடி 7-15,4-15என்ற செட் கணக்கில் தோல்வியுற்றது.

இந்த காலிறுதிக்கு முந்[illegible]யச் சுற்று ஆட்டம் புதன்கிழமை இரவு நடைபெற்றது. முன்னதாக தங்களது முதல் சுற்றில் ஜப்பான் ஜோடியையும் அடுத்த சுற்றில் நெதர்லாந்து ஜோடியையும் இந்தியக் குழுவினர் தோற்கடித்து; முன்னேறினர். ஆடவருக்கான ஒற்றைய மற்றும் இரட்டையர், மகளி ஒறறையர் பிரிவுகளில் ஏற்கனவே இந்திய வீர, வீராங்கனைகள் தோல்வியுற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## தென்மராட்சி வலய தாச்சிப் போட்டிகள

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்படும் தாச்சிப் போட்டி எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி பி.ப.2.00மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியா சாலை மைதானத்தில் நடைபெ[illegible]வுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் மு.ப.செல்வராசா தலைமையில் நடைபெறும் இப் போட்டியில்,

3ஆம் இடத்துக்காக வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலய ஆண்கள் அணியை எதிர்த்து விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய ஆண்கள் அணியும்.

3ஆம் இடத்துக்காக சாவகச்சேரி மகாவித்தியாலய பெண்கள் அணியை எதிர்த்து கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய பெண்கள் அணியும்,

1ஆம், 2ஆம் இறுதி ஆட்டங்களில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய பெண்கள் அணியை எதிர்த்து மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை பெண்கள் அணியும் விக்னேஸ்வரா வித்தியாலய ஆண்கள் அணியை எதிர்த்து கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலய ஆண்கள் அணியும் போட்டியிடவுள்ளன. (ப-47,10)

## கிரிக்கெற் வீரர் முரளி திங்களன்று யாழ்.வருகை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பட்டினி ஒழிப்பு சம்பந்தமான விசேட தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் கிரிக்கெற் வீரர் முத்தையா முரளிதரன் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவருடன் உலக உணவுத் திட்ட அமைப்பின் உயர் அதிகாரிகள் சிலரும் யாழ்ப்பாணம் வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு இல.103 கோயில் வீதியில் உள்ள அலுவலகத்தில் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பையும் நடத்தவுள்ளனர்.


அத்துடன்,ஐ.நா.வின் உலக உணவுத்திட்ட அமைப்பினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமுல் செய்யப்படும் போஷாக்கு குறைந்த மாணவர்களுக்கான இலவச உணவுத்திட்டத்தையும் பார்வையிடவுள்ளனர். இந்தத் திட்டத்தின்கீழ் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகின்றதுடன் பாலூட்டும தாயமாருக்கு போஷாக்குமிக்க உணவுகள் விநியோகிக்கப்படுகின றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## பாகிஸ்தானின் அபார பந்துவீச்சு இலங்கை அணி திணறல்

பாகிஸ்தான் அணியின் சிறப்பான பந்துவீச்சில் திணறிய இலங்கை முதல் இனனிங்சில் 208 ரணகளுக்கு ஆல் அவுட் ஆனது.

பாகிஸ்தான்-இலங்கை இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி காராச்சியில் நேற்று முன்தினம் தொடங்கியது டாஸ் வென்ற பாகிஸ்தான் பந்துவீச்சை தோவுசெய்தது. முன்னணி பந்துவீச்சாளர்களான சேயிப் அக்தர், முகமது சமி காயம் காரணமாக அணியில் இடம்பெறவில்லை.

இவருக்கு பதிலாக நவேத் உல ஹசன், ரியாஷ் அப்ரிதி அறிமுக வீரர்களாக களமிறக்கப்பட்டனர். அதிவேகபபந்து வீச்சாளர்கள் இல்லாத நிலையில் களமிறங்கினாலும பாகிஸ்தான் பந்துவீச்சு அபாரமாக



இருந்தது.

ஜெயசூர்யா, அத்தப்பத்து, சங்ககார, ஜெயவர்த்தன ஆகியோர் சீரான இடைவெளியில் வெளியேறினர். இந்நிலையில் அப்துல் ரசாக் பின்வரிசை ஆட்டக்காரர்களை விரைவில் வெளியேற்றினார். சிறப்பாக பந்துவீசிய இவர் 5 விக்கெற் கைப்பற்றினார்.

அதிக பட்சமாக களுவிதாரண 54 ரண்கள் எடுத்தார். முதல்நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெற்றுகளையும் இழந்து 208 ரண்கள் மட்டுமே எடுத்தது. ரசாக் 5, கனேரியா 3, ரியாஷ் அப்ரிதி 2 விக்கெற் கைப்பற்றினர்.

## உலக செஸ் ஒலிம்பியாட் இந்திய பெண்கள் அணி வெற்றி

உலக செஸ் ஒலிம்பியாட் தொடரில் நேற்று முன்தினம் நடந்த 12 ஆவது சுற்றில் இந்திய பெண்கள் அணி அபாரவெற்றி பெற்றது.

ஸ்பெயின் நாட்டின் மல்லார்கா நகரில் 36ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் தொடர் நடக்கிறது. 14 சுற்றுகள் கொண்ட இத்தொடரில் உலகின் முன்னணி அணிகள் பலவும் விளையாடி வருகின்றன. 12ஆவது சுற்றுப் போட்டி நேற்று முன்தினம நடந்தது. இந்திய பெண்கள் அணி அஜர்பெய்ஜான் அணியை எதிர்த்து விளையாடியது. கோனேரு ஹம்ப விஜயலட்சுமி அபாரமாக ஆடி இந்திய அணி 2.5-0.5என்ற புள்ளி கணக்கில் வெற்றிபெற்றது. தற்போது இந்திய அணி 22.5புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளது. மீதமுள்ள இரண்டு சுற்றுக்களிலும் இந்திய வீராங்கனைகள் அதிக புள்ளிகளுடன் வெற்றி பெற்றால் மட்டுமே பதக்கத்தை கைப்பற்ற முடியும்.

அடுத்த சுற்றில் இந்திய அணி நடப்பு சம்பியனான சீனாவை எதிர்த்து விளையாடுகிறது. சீனா 27 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதல் இடத்தில் இருந்து வருகிறது. ஆண்கள் பிரிவில் மீண்டும் ஒருமுறை இந்திய வீரர்கள் ஏமாற்றமளித்தனர். இஸ்ரேலிடம் 2.5-1.5என்ற புள்ளி கணக்கில் இந்திய வீரர்கள் தோல்வி அடைந்தனர்.

இதன்-மூலம் இந்திய அணி 29 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திற்கு பின்தங்கியுள்ளது. இன்னும் இரண்டு சுற்றுகள் மட்டுமே உள்ளதால் இந்திய அணி பதக்கம் வெல்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. உக்ரைன் 34.5 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. நடப்புச் சம்பியனான 31 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

(ப)

## விளையாட்டு செய்திகள்



மெல்போனில் அமைந்துள்ள பிளமிங்ரன் குதிரைப்பந்தய மைதானத்தில் முதல்சுற்று ஓட்டத்தை முடித்துக் கொண்ட டெர்பி பந்தயக் குதிரையான லயன்கேற் லிண்ட்சே மைதானத்தில் இளைப்பாறும் காட்சி.

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து - குறள்

வலம்புரி

## எதிர்க்கட்சிகளுக்கு சவாலான ஜனாதிபதியின் பதவிக்காலம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் 2006 டிசம்பர் மாதமே முடிவுறும் என அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவுறும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே பதவிக்காலம் முடிவுறும் என்ற அறிவிப்பு இப்போது அரச தரப்பால் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலத்தை 2006 ஆம் ஆண்டுவரை நீடிப்பதற்காக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் எனவும், அதற்காக அவர் மூன்று தடவைகள் சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளார் எனவும், குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் பெரும் வியாபகமடைந்திருந்தபோதிலும், அது விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மௌனம் சாதித்தார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் எதுவரை நீடிக்கும் என்ற கேள்விக்கு விடை தரும் பொறுப்பு உயர் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் உயர் நீதிமன்றம் அந்த முடிவில் தலையிடாமல், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று தடவைகள் சத்தியப் பிரமாணம் செய்தது சட்ட ரீதியானதா? - ஜனநாயகத்திற்கு உகந்ததா? என்ற வினவல்களை மட்டும் எடுத்துக் கொண்டது.

அது விடயத்தில் தீர்ப்பளித்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா ஜனாதிபதி ஒவ்வொரு நாளும் சத்தியப் பிரமாணம் செய்தாலும் அதில் தவறில்லை எனக் கூறினார்.

ஜனாதிபதி மூன்று தடவைகள் சத்தியப் பிரமாணம் எடுத்ததை குற்றச்சாட்டாக முன்வைத்த ஐக்கிய தேசியக் கட்சி பிரதம நீதியரசரின் அறிவிப்புடன் அமைதி கொண்டது.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாகப் போட்டியிட்ட சந்திரிகா குமாரதுங்க அதில் வெற்றிபெற்றார். இலங்கை அரசியல் அமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் ஆறு வருடங்களாகும்.

அதேவேளை ஒருவர் ஜனாதிபதித் பதவியில் இரண்டு தடவைகள் மட்டுமே இருக்கமுடியும். அவ் வகையில் 1994 இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் 2000 ஆம் ஆண்டுடன் நிறைவு பெற்றிருக்கும்.

எனினும் ஒருவருடம் இருப்பதற்கு முன்னதாக 1999 ஆம் ஆண்டில் 5 வருட பதவிக்காலத்துடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்தார். இத் தேர்தலில் அவரே வெற்றிபெற்றதால், மீண்டும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இப்போது இரண்டாவது தடவையும் தான் வெற்றி பெற்றதால், ஒருவருடத்திற்கு முன்னர் நடத்தப்பட்ட தேர்தலால் விடுபட்ட "ஒருவருடப் பதவியையும்" இரண்டாவது தடவையில் சேர்த்துக் கொண்டு தனது பதவிக்காலத்தை நீட்ட முடிவு செய்துள்ளார்.

இந்த முடிவு இதுகாறும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாமல் இருப்பினும் தற்போது அதனை அமைச்சரவைப் பேச்சாளர் வெளிப்படுத்தியிருப்பது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் "இந்த வெளிப்படுத்துகை" ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு பெரும் சவாலாகவே அமையும்.

5 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டதாக

# பி.பி.ஸி. ஒலிபரப்பிய செய்திக்கு விடுதலைப் புலிகள் மறுப்பு

(திருகோணமலை)

பலவந்தமாக தமிழ் இளைஞர்களை தமது அமைப்பில் இணைத்துக்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் முயற்சி மேற்கொண்டதாக பி.பி.ஸி. ஒலிபரப்பில் தெரிவித்த குற்றச் சாட்டை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

திருகோணமலையிலிருந்து விடுதலைப் புலிகள் 5 தமிழ் இளைஞர்களைப் பலவந்தமாகக் கடத்திச் சென்றதாகவும், சாம்பல் தீவு கடற்படையினரின் வீதிச் சோதனைச் சாவடியில் வைத்து இவர்களை கடற்படையினர் மீட்டதாகவும் கடந்த புதன்கிழமை பி.பி.ஸி. ஒலிபரப்பில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

சுயவிருப்பத்தின் பேரில் தமது அமைப்பில் இணைய வந்த 5 இளைஞர்களைத் தமது உறுப்பினரொருவர் அழைத்துச் சென்ற போது, கடற்படையினரின் சோதனைச் சாவடியில் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டதாகவும், அவர்களிடம் ஆள் அடையாள அட்டைகள் இல்லையென்பதனால் அவர்களைத் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கமுடியாதென கடற்படையினர் தெரிவித்து அவர்களைத் தடுத்து வைத்ததாகவும் எழிலன் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினூடாக 5 இளைஞாகளும் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.செய்தி ஒலிபரப்பப்பட்டமையானது திட்டமிட்ட வகையில் தமக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அவதூறு ஏற்படுத்தும் முயற்சி என்றும் அவா குற்றம்சுமத்தியுள்ளார்.

அத்துடன், இந்த விடயம் குறித்து கண்காணிப்புக் குழுவிடமும் தமது கடுமையான ஆட்சேபத்தை தெரிவித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

## சுவிஸ் பிரஜை கொலை குறித்து விசாரணை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியில் இடம்பெற்ற கிரனைற் தாக்குதலில் சுவிஸ் பிரஜை உயிரிழந்த சம்பவம தொடா்பாக விசேட விசாரணைகள் இடம்பெற்று வருவதாக கிழக்குப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடஙகளுக்கு முன்னா இலங்கைக்கு வந்த இவா், மட்டக்களப்பில் உள்ள தமிழ்ப் பெண்ணொருவரைத் திருமணம் செய்துள்ளார். இவர் வீட்டில் இருந்த சமயம் இனந்தெரியாத நபர்களினால் கிரனைற் வீசியபோது படுகாயமடைந்த பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தமை தெரிந்ததே. (ற-8)

## இராணுவம்-புலிகள் இன்று வவுணதீவில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவில் இன்று சனிக்கிழமை இராணுவத்தினருக்கும விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

கடந்த 6ஆம் திகதி இருதரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்பு பல போர் நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக குறிப்பிட்ட சந்திப்பின் பின்பு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் உட்பட 6 பேர் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பு தமது வன்மையான கண்டனத்தை இச்சந்திப்பின் போது வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர - சுவிஸ் பிரஜையான ஹான்ஸ்வுல்ரிச் ஹேர்சோக் படுகொலை குறித்து உண்மை நிலை கண்டறியப்பட வேண்டியதன் அவசியம், கருணா குழுவினரின் அரசியல் கட்சி தொடர்பான பிரசுரங்கள் இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்டமை, வாழைச்சேனை ஆலங்குளத்தில் புதிதாக இரா்ணுவ காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றமை, இராணுவ புலனாய்வுத் துறையினரால விடுதலைப் புலிகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு வழங்கப்படும் தகவல்கள் போன்றன குறித்தும் இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பினர் சுட்டிக்காட்டுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## கல்வந்தாழ்வு முன்பள்ளி மூடப்பட்டுள்ளதால் பாதிப்பு

காரைநகர் கல்வந்தாழ்வு முன்பள்ளி கடந்த நான்கு மாதங்களாக மூடப்பட்டுள்ளது. இதனால் அக் கிராமத்தைச் சோந்த 40இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் முன்பள்ளிக் கல்வியை இழந்துள்ளனர்.

இம் முன்பள்ளிக்குப் பொறுப்பாக இருக்கும் ஆசிரியருக்கு வேதனம் எதுவும் வழங்கப்படாததாலேயே இவ் முன்பள்ளி மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் மூடப்பட்ட இவமுன்பள்ளியை மீள இயஙக வைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள எவரும் முன்வராதது குறித்து மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப-246)

## இந்திய மீனவர்கள் இலங்கையில் மீன்பிடிப்பதற்கு இடமளிக்கக் கூடாது

கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உரித்தான பொருளாதார வலையத்திற்கு சொந்தமான கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு இந்திய மீனவா்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது என கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,இக்கடற்பரப்பில் காணப்படும் மீன் வளத்தைப் பெற்றுக் கொளவதற்கு இலங்கை மீனவர்களுக்கு சந்தா்ப்பம் வழங்கப்பட வேண்டும் என கடற்றொழில் நிரியல் வள அமைச்சின் செயலாளர் தெரிவிக்கின்றார்.

கடந்த சில தினங்களாக சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் பலர் இலங்கையின் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-10)

## சேது சமுத்திரத் திட்டத்திற்கான அங்குரார்ப்பணம் பொங்கலன்று

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் துறையில் உள்ள ரி.வி.அந்தோனி தலைமையிலான நிபுணா்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்து தமிழா் திருநாளான எதிர்வரும் தைப் பொங்கல தினதந்ன்று இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வை நடத்த ஏற்பாடு செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாகபுரியில் உள்ள தேசிய சுறறுச்சூழல் பொறியியல் ஆய்வுக் கழகம் சுற்றுச்சூழல் கண்ணோட்டத்தில இந்தத் திட்டத்தை ஆராய்ந்து அளித்த அறிக்கை அடிப்படையிலேயே அந்தோனி தலைமையிலான நிபுணர்குழு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த சேது சமுத்திரத் திட்டத்தை அமுல்படுத்த மையஅமைப்பாக தெரிவுசெயயப்பட்டுள்ள தூத்துக்குடி துறைமுகக் கழகத்தின் தலைவா் கே.ரகுபதியும் இந்தத் திட்டம் தொடர்பான விபரங்களை நிபுணர்குழுவிடம் கையளித்துள்ளார்.

இதற்கு தமிழக அரசில் இருந்து ஆட்சேபம் எதுவுமில்லை என்ற சான்றிதழ் பெறப்பட்டதும் இந்தத் திட்டத்திற்கு இறுதி அனுமதி வழஙகப்படும் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க)

## புதுடில்லியில் இருவாரம் 'வர்த்தகக் கண்காட்சி'

(யாழ்ப்பாணம்)

வர்த்தகக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை இந்தியாவில் உள்ள புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இக்கண் காடசியில் 19ஆம் திகதி தொடக்கம் 5 நாட்களுக்கும் 20ஆம் திகதி தொடக்கம் 8 நாட்களுக்குமாக இரு குழுக்களாக இலங்கையின் பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் இயந்திரங்கள், இயந்திர உற்பத்தி, மின் இயந்திர உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், தொழில் கைத்தொழில், பொருளியல் கைத்தொழில் பொருட்கள், தோல் மற்றும் தோல் சார்ந்த பொருட்கள், விவசாயம் விவசாய உபகரணங்கள், விவசாய உணவு பதப்படுத்தல், வாகன உதிரிப் பாகங்கள், உ  ரியல் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்பம், இல  திரனியல் தொழில் தொலைத் தொடர்புக் கருவிகள், சிறுகைத்தொழில் இயந்திரங்கள், உபகரணங்கள், மருநது வகைகள், இரசாயன மருந்துகள், குறைந்த செலவு கட்டிடப்பொருட்கள் ஆகிய துறைசார்ந்தோர் பங்குபற்றலாம்.

இக்கண்காட்சியில் பங்குபற்ற விரும்புவோரை எதிர்வரும் நவம்பர் மதம் 3ஆம்திகதிக்கு முன்னதாக யாழ் .வணிகர் கழகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

### தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

எங்கு பார்த்தாலும் செயல்முறை மதத்தைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் வருவது ஒரேஒரு கருத்து- அதுதான் மனித நேயம் . மதம் என்பது அவ்வளவுதானா, செயல்முறை கிறிஸ்தவம் பற்றி இங்கே தினமும் கேட்கிறோம். அதாவது ஒருவன் சக மனிதர்களுக்கு ஏதோ நன்மை செய்துவிட்டான். எல்லாம் அவ்வளவு தானா?

சுவாமி விவேகானந்தர்

## இரண்டாம் கட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சிகள்

# நவம்பர் முதலாந் திகதியிலிருந்து முழு நாளாக நடைபெறவுள்ளது

### பயிற்சி நிலையங்கள் சிலவற்றில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ். இரண்டாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங் கப்படும் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் முதலாந் திகதியிலிருந்து முழுநாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி காலை 9 மணியிலிருந்து மாலை 4மணிவரை நடைபெறும். இது வரை காலமும் அவர்களுக்கு பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இதுவரை காலமும் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்ற சில இடங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் பிரதேசசபை மண்டபத் தில் நடைபெற்ற வகுப்புக்கள் மீசாலை கமநல சேவை மண்டபத்திற்கு மாற்றப்பட் டுள்ளது.

யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத் தில் நடைபெற்ற பயிற்சி வகுப்புக்கள் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்திற் கும், நல்லூர் தெற்கு விக்னேஸ்வராவில் நடைபெற்ற வகுப்புக்கள் யாழ். கமநல சேவைத் திணைக்கள மாநாட்டு மண்டபத் திற்கும் மாற்றப்பட்டுள்ளது.

இதேபோன்று வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் மற்றும் செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடை பெற்ற வகுப்புக்கள் யாழ். திறந்த பல் கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

நாயன்மார்கட்டு விக்னேஸ்வரி வித்தி யாலயம், அச்சுவேலி சென். திரேசா வித்தி யாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் நடைபெற்ற பயிற்சி கள் முறையே கொக்குவில் பிரதேச சபை மண்டபம், புத்தூர் கமநல சேவை நிலை யம், புத்தூர் சோமஸ் கந்தா வித்தியால யம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

வேலணை சரஸ்வதி வித்தியாலயத் தில் நடைபெற்ற வகுப்புக்கள் வேலணை கமநல சேவைத் திணைக்களத்திற்கு மாற் றப்பட்டுள்ளது.

(ச-19)

## 'செவ்விளக்கு' பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங் கியலும் மாணவர்களினால் நேற்று மேடை யேற்றப்படவிருந்த செவ்விளக்கு நாடகம் மேடையேற்றப்படவில்லை.

கலைப்பீட மாணவன் எஸ். விவேகா னந்த மூர்த்தியின் அகாலமரணத்தை யிட்டே நாடக மேடையேற்றம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

(...)

## மோட்டார் சைக்கிள் விபத்தில்...

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத் தைச் சேர்ந்த பி. கபிலன் (வயது26) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை இவர்களுடன் மோட்டார் சைக்கிளில் கூடச்சென்ற சிறுவன் தெய்வா தீனமாக எதுவிதகாயமுமின்றி தப்பியுள் ளார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, மோட்டார் சைக்கிளில் சிறுவனை நடுவில் ஏற்றிக்கொண்டு இருவரும் அச்சிறுவனுக்கு இடம் சுற்றிக்காட்டுவதற்கு சென்றுகொண் டிருந்த வேளையில் திடீரென மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு வீதிக்கு அப்பால் பற்றைகள் நிறைந்த வெள்ள வடிகாலுக்குள் வீழ்ந் தது.

இதனால் பற்றைக்குள் நின்ற மரங் களில் மோதுண்டு பிரஸ்தாப மாணவன் மரணமானார்.

இதேவேளை பிரஸ்தாப மாணவனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பல்கலைக் கழக வளாகம் எங்கும் கறுப்புக்கொடி கட்டப்பட்டிருந்தன.

இன்று மாணவனின் சடலம் பல்கலைக் கழக மாணவர்களால் அவரின் சொந்த ஊரான மட்டக்களப்பு காரைதீவுக்கு எடுத் துச் செல்லப்படவுள்ளது.

இச் சம்பவத்தையடுத்து இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் துக்கதினம் அனுஷ் டிக்கப்படுகிறது.

இதேவேளை இச்சம்பவம் குறித்து தமது ஆழ்ந்த அனுதாபத்தை யாழ். பல் கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரி யர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் வீதி விபத்துக் களும் உயிரிழப்புக்களும் தொடர்கதை யாக தொடர்கின்றமை இங்கு வேதனை யுடன் சுட்டிக்காட்டப்படவேண்டிய விடய மாகவுள்ளது. (இ-19-50)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசார விழா

(பருத்தித்துறை)

வடமராடசி தெற்கு மேற்கு பிரதேச கலாசார பேரவையின் கலாசார விழா இன் றும் நாளையும் வடமராட்சி தென்மேற்கு பிர தேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வுகள் மன்னவன் கந்தப்பு அரங்கில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் எஸ். பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், பாராளு மன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ரி. செல்வர்த்தினம் ஆகியோரும் வடம ராட்சி மகளிர் அரசியல்துறைப் பொறுப்பா ளர் அன்பு கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

இந் நிகழ்வில் ஒரு அம்சமாக இரண் டாம் நாள் நிகழ்வுகள் பேராசிரியர் எ.துரைராஜா அரங்கில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெ றும். யாழ். பல்கலைக்கழக விரிவுரையா ளரான ஈ. குமரன், கே. அகுந்தரகரன் மற்றும் கே. குகனேஸ்வரன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் பண்டிதர் இ. வீர கத்தி அரங்கில் பிரதேச செயலர் எஸ். சத் தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பல்கலைக்கழகத் துணைவேந் தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும் பாராளுமன்ற உறுப்பினர் களான கே. சிவநேசன், எஸ். கஜேந்திரன் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பா ளர் ஆர். தயா, பிரதேச சபை செயலாளர் எம். யோசப் ஆகியோர் சிறப்புவிருந்தினர் களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ப-52,10)

## அகாசி - சோமவன்ச நேற்று முக்கிய சந்திப்பு

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசியை ஜே.வி.பியின் தலைவர் சோம வன்ச அமரசிங்க சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்று முற்பகல் கொழும்பிலுள்ள ஜே.வி.பியின் அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. இச் சந்திப்பில் சமாதான முயற்சிகள் குறித்தும் ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்தும் தூதுவர் யசூசி அகாசி சோமவன்சவுடன் ஆராய்ந்தார்.

(இ-121)

### யாழ்ப்பாணத்தில்...

பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சுதாஸ், மாணவர் அமைப்பு பொறுப்பா ளர் எழிலன்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இராணுவத் தரப்பில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுசில் தென்னக்கோன் தலைமையிலான உயர்மட்ட அதிகாரி களும் யாழ். மாவட்டப் பொலிஸ்மா அதி பர் வனகுரு தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் குழுவும் கலந்துகொண்டனர்.

(ச-08-43)

### ஆளுநர் அசோக...

வடக்கு-கிழக்குப் பகுதியில் பதற் றத்தை தணித்து தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்வு நிலையை உறுதிப்படுத்தி தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப்புலிகளிடம் வழங்கவும் அதுவே நீண்டகாலமாக புரையோடிப் போயிருக்கும் இலங்கையின் இனப்பிணக்கை தீர்த்து வைக்க உதவும்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை களுக்கு தீர்வு காணாமல் எந்தவொரு அரசுப் பிரதிநிதியும் இங்கு வருவதால் எதுவும் ஏற்படப் போவதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை இது தொடர்பாக கண்டனத்தை வெளியிட்டுள்ளது. (ச)

### டக்ளஸ் - அகாசி...

பாட்டிற்கு வந்துள்ளது. இச் சந்தர்ப்பத் தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் கலந்துகொள்ள முன்வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டதாக ஈ.பி.டி.பி. நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மற் றும் தென்னிலங்கையில் இடம்பெற்றுவரும் படுகொலைகளை உடன் நிறுத்த நட வடிக்கை எடுக்கவேண்டும். ஜப்பானிய அர சினால் இணங்கிக்கொண்டதற்கு அமைய வடக்குக் கிழக்கின் மீள் கட்டமைப்பிற் கும் மக்களின் அத்தியாவசிய தேவை களுக்கும் வழங்கப்படவேண்டிய நிதி கட் டம் கட்டமாகவேனும் அரசின் ஊடாக வழங்கவேண்டும் என்பன தொடர்பாக தாம் வலியுறுத்தியதாக அச் செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### ஈராக்கில்...

உள்ள இலங்கை தூதுரகத்திற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள் ளது.

கடத்தப்பட்ட இலங்கையர் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக லெபனானுக்கான இலங்கைத் தூதுவர் அமானுஷ் பாருக் தெரிவித்துள்ளார்.(ற)

## இடைக்கால வரைபின் அடிப்படையில்...

பட்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம் பிக்கப்பட்டது. 56 நாடுகள் கலந்து கொண்ட டோக்கியோ மகாநாட்டில் சமா தானத்தை ஊக்குவிக்கும் வகையில் நிதி உதவி வழங்க சர்வதேச சமூகம் இணக் கம் தெரிவித்தது. சமாதானப் பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகவே சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றைக் காண இணக்கம் ஏற்பட் டது. இடைக்கால தீர்வாக விடுதலைப் புலிகள் தன்னாட்சியுள்ள இடைக்கால சபை யோசனையை முன்வைத்தார்கள். அந்த யோசனையை ஏற்காது விட்டாலும் அதன் அடிப்படையில் பேச்சுவார்த் தைகளை ஆரம்பிப்பதில் எந்த தடையும் இல்லை.

தற்போதைய அரசாங்கம் பல கட்சி களைக் கொண்டமையினால் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. அரசியல் யாப்பை மாற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் சர்வ ஜன வாக்கெடுப்பும் தேவை. ஆனால் அதற்கு மாறாக அரசியல் யாப்பு சபையை உருவாக்க ஜனாதிபதி முற்படுகின்றார். இது நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். அரசின் நடவடிக்கை சாத்தி யப்படுமானால் விடுதலைப் புலிகளும் அரசியல் யாப்பை உருவாக்கி தாங்களும் ஒரு இராச்சியத்தை உருவாக்க முடியும் என்றும் கூறிய விக்கிரமசிங்க மேலும் பேசுகையில்,

நாங்கள் ஆட்சிப்பீடத்தில் இருக்கும் போது புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் முதற்கட்ட நடவடிக்கைகளை கொண்டு வந்தோம். ஆனால் அச்சமாதான முயற்சி கள் தற்போது தடம்மாறிச் செல்கின்றன.

இந்நிலையில் அரசியல் யாப்பிற்கு விரோதமான அரசியல் நிர்ணய சபையை அரசாங்கம் அமைப்பது சமாதானச் செயற் பாடுகளை முழுமையாக வீழ்ச்சியடையச் செய்யும்.

அரசியலமைப்பை மாற்றியமைப்பது தொடர்பான சட்டபூர்வமான முறைமை அர சியல் யாப்புக்குள்ளேயே கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக நாட்டுமக்களின் வாக்கெடுப்பு ஒன்றும் நடாத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

அரசியல் அமைப்பிற்கு விரோதமான அரசியல் நிர்ணய சபையை அமைக்கும் நோக்காகவே சபாநாயகரை பதவியி லிருந்து நீக்க முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு அரசியல் அமைப்பை மாற் றக்கூடிய நடவடிக்கை எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கத் தினாலும் இலகுவாக மேற்கொள்ள கூடிய தாக இருக்காது.

அத்துடன் இது ஒற்றையாட்சிக்கும் ஜனநாயகத்திற்கும் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும்.

இத்தகைய முயற்சிகள் எதிர்காலத் தில் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய வழியைத் திறக்கும் நடவடிக்கையாக அமைந்துவிடும் என்று எச்சரித்த அவர்,

வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிக ளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை நிறுவ அதற்கு ஆதரவாக வாக் களிப்பதற்கு 22 பாராளுமன்ற உறுப்பினர் கள் இருக்கின்றார்கள் என்றும் தெரிவித் தார்.

(இ-121)


## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் சு. விதூர்ஷன்

ஜேர்மனியில் இன்று (30.10.2004) தனது 10 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் சுந்தரலிங்கம் விஜயகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் விதூர்ஷன் சகல கலை களும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ உளமார வாழ்த்துகின் றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மாவுடன்:
மாமன்மார்: ஆ. குணபாலசிங்கம்
ஆ. தனபாலசிங்கம்
ஆ. விஜயபாலசிங்கம்
ஆ. ஜெயபாலசிங்கம்
ஆ. இராஜபாலசிங்கம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

(C/666)



இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.